உ உ

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா துணை!

# தமிழ்த்தெய்வம்
# ஸ்ரீ மகாபெரியவா!

**அகிலா கார்த்திகேயன்**


**பகவான் யோகமூர்த்தி ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாள்**

**மீளா அடிமை டிரஸ்ட்**

நெ. 54, ஸ்ரீஸ்ரீஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தெரு,

பங்காரு அம்மன் தோட்டம், காஞ்சிபுரம்.

தொலைபேசி : 044 - 27237360

அகிலா கார்த்திகேயன் : 9940326561

# முன்னுரை

**உ**லகமெலாம் வியாபித்தருளும் சாக்ஷாத் பரமேஸ்வரரான ஸ்ரீஸ்ரீஸ்ரீ மகாபெரியவா மொழி இனம் மதங்களுக்கு அப்பாற்பட்ட தெய்வம் என்பதே உண்மை.

ஆனாலும் அத்தெய்வம் தமிழ்மொழி தெய்வமாய் அருளியுள்ள சம்பவங்களை நூலாக எழுதலாமென்று ஒரு சந்தர்ப்ப சூழ்நிலை என்னை நினைக்கத் தூண்டியபோது அதற்கான உத்தரவு கிடைக்கிறதா என்று ஸ்ரீபெரியவா புத்தகங்களுக்கு நடுவே ஒரு புத்தக பக்கத்தை விரித்தேன். அங்கே அத்தெய்வம் ஜாதி, மதம் சம்பந்தப்படாத தமிழ்மொழிக்காகவே அனுக்ரஹம் செய்துள்ள அரிய சம்பவம் தென்பட்டது. உள்ளே அச்சம்பவத்தைக் காணலாம்.

இதையே ‘தமிழ்த் தெய்வம் ஸ்ரீ மகா பெரியவா’ என்ற நூலை எழுத அருட்தெய்வத்தின் உத்தரவாக அடைந்ததில் மகிழ்ச்சியுற்றேன்.

பல நூல்களிலிருந்து தொகுத்திட்ட அச்சம்பவங்களை பக்தர்களும் படித்து மகிழலாம்.

❖ ❖ ❖

# 1. பிரம்மிக்க வைக்கும் ஸ்ரீ பெரியவாளின் தமிழ்

**திரு.** கி.வா. ஜகன்நாதன் அவர்கள் பெரும் தமிழ் அறிஞர். அவர் ஒருமுறை ஸ்ரீ பெரியவாளை தரிசித்தபோது அத்தெய்வம் இவரிடம் "தமிழ் என்றால் என்ன? தமிழ்னு ஏன் பேர் வந்தது?" என்று ஒரு குழந்தையைப் போல் கேட்டார். திரு. கி.வா. ஜ. அவர்களுக்கே இக்கேள்வி வேடிக்கையாக தோன்றியிருக்கலாம்.

பெரும் தமிழ்ப்புலமை வாய்ந்தவராக இருந்தாலும் எதிலே கேள்விகேட்கும் தெய்வம் இதை எதற்காகவோ ஒரு காரணத்தோடுதான் கேட்டிருக்க வேண்டுமென நினைத்தவராய் தனக்குத் தெரிந்ததை சொல்ல இவர் தயங்கினார். அதனால் மிகவும் பவ்யமாக "பெரியவா சொன்னா தெரிஞ்சுக்கறேன்" என்றார். உண்மையில் தெய்வத்திடமிருந்து தனக்கு தெரியாத ஒரு 'தமிழ்' பற்றிய கருத்து கிடைக்குமென்று அவர் எதிர்பார்த்தார்.

ஸ்ரீபெரியவாளும் ஒரு மெல்லிய புன்னகையோடு கி.வா.ஜ. அவர்களின் சாமர்த்தியத்தை ஏற்றுக் கொண்டவராய் பதில் சொல்ல விழைந்தார்.

"எந்த மொழியிலும் இல்லாத சிறப்பான எழுத்து 'ழ' என்பது" என்று எல்லோருக்குமே தெரிந்த ஒரு விஷயத்தை கூறத் தொடங்கினார். அதன்பின் கூறிய விளக்கம் வியப்பளித்தது.

"தமிழோட இந்த விசேஷமான எழுத்து 'ழ' வர எந்த வார்த்தையும் அழகு, இனிமை சம்பந்தமாகத்தான் இருக்கும்.



மழலை, குழல், அழகு, குழந்தை, கழல், நிழல், பழம், யாழ் இப்படி 'ழ'" வர்ற எல்லாமே நமக்குப் பிடிச்சதாதான் இருக்கு. இப்படி இனிமையான 'ழ' வை தம்மிடத்தில் கொண்ட மொழியானதாலே, அதான் 'ழ' வை 'தமி'டத்தே உடைய மொழியை 'தமிழ்' ன்னு சொல்லாமோ."

ஒன்றும் தெரியாத குழந்தையாய் இதுவரை யாருக்குமே தோன்றாத 'தமிழ்' என்ற பதத்திற்கான ஒரு உயரிய விளக்கத்தை தந்து வியக்க வைத்தார்.

திரு. கி.வா. ஜ அவர்கள் உடனே கைகூப்பி அத் தமிழ்த்தெய்வத்தை வணங்கி

"... இதைவிட பொருத்தமான விளக்கம் பெரியவாளை தவிர யாரும் கொடுக்க முடியாது. இனிமே எல்லா மேடையிலும் இதைச் சொல்றேன்" என்று நெகிழ்ந்தாராம்.

❖ ❖ ❖

## 2. காளமேகம் காவிமுனிவர்

**ஸ்ரீ**மஹா பெரியவாளின் தரிசனத்திற்கு வந்து நின்ற தமிழ்ப் புலவர்களைப் பார்த்து பெரியவா சொன்னார்:

“காளமேகப் புலவர் பாடிய பாடலில் ஒன்று. முக்கால் அரை, கால், அரைக்கால் என்று குறைந்து கொண்டே வரும் என்று சொல்லிவிட்டு,”

**முக்காலுக்கு ஏகாமல் முன்னுரையில் வீழாமுன்**
**அக்கா வரைக்கால் கண்டு அஞ்சாமுன்**
**விக்கி இருமாமுன் மாகாணிக் கோகாமுன்**
**கச்சி ஒருமாவின் கீழரை இன்றோது**

என்று அப்பாடலையும் எடுத்தியம்பினார்.

பின் “முக்கால்னா மூன்று கால்கள். வயதானபின் இரண்டுகாலில் நடக்க தள்ளாடி ஒரு தடியை மூன்றாவதாக பிடிச்சுக்கிறோமோல்யோ... அதுதான் முக்கால். அந்த நெலைமை வருவதற்குள் முன்னரையில் வீழாமுன் நரை வருவதற்கு முன்னாலே விக்கலும் இருமலும் வருவதற்கு முன்னாலே, யமனுடைய காலடி நம்மை அணுகுவதற்கு முன்... ஊருக்கு வெளியே ஒரு மாகாணி என்ற சுடுகாட்டுக்கு போகும் முன்... காஞ்சியிலே ஒரு மாமரத்தின் கீழ் உள்ள ஏகாம்பரேசுவரரை இன்றைக்கே துதிப்பாய்” என்று அழகாக விளக்கினார்.

மேலும் “என்ன அழகு பார்த்தேளா! ஏகாம்பரரை அந்த ஒன்று என்ற எண்ணுக்கு கீழேயே கொண்டு வந்து கீழரை வரை எட்டு அளவுகளையும் கோத்து பாடியிருக்காரே” என்று சொல்லி மகிழ்ந்தாராம்.



‘ஏகம்’ அதாவது ‘ஒன்று’ என்பதை உள்ளடக்கிய சாக்ஷாத் ஏகாம்பரேஸ்வர ஸ்ரீபெரியவாளே தமிழ்த்தெய்வம் என்று அந்த தமிழ்ப் புலவர்கள் வியந்து போற்றினராம்.

அதேபோல் சீர்காழி பதிகத்தில் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் பாடியிருக்கும்,

“யாமா மாநீ யாமா மா” என்ற மாற்றுமாலை பதிகம் மிகவும் கடினமானது. அவற்றுள் ஒன்றை ஸ்ரீபெரியவர் எடுத்து மிகவும் கடினமான பதத்தைப் பிரித்துப் பிரித்து மிக எளிமைப் படுத்தி பொருள் சொன்னாராம்.

கேட்ட பெரிய தமிழ் வித்வான்கள் பிரம்மித்து நின்றனராம்.

❖ ❖ ❖

## 3. தமிழ் பரிகாரம்

**ம**யிலாடுதுறை சமீபம் வேட்டமங்கலம் என்ற சிறிய கிராமத்தில் பெரியவா முகாமிட்டிருந்தபோது கும்பகோணத்திலிருந்து சிவனடியார்கள் பதறிப்போய் வந்தனர்.

பிள்ளையார் சிலையை உடைக்கும் போராட்டத்திற்கு தேதி குறிப்பிடப்பட்டிருந்ததுதான் இவர்களின் படபடப்பிற்கு காரணம். அதற்குப் பரிகாரமாக என்ன செய்வதென்பதை அறியாமல் நடமாடும் தெய்வத்திடம் வந்து முறையிட்டனர்.

அதற்குப் பதில் நடவடிக்கையாக தங்கள் எதிர்ப்பைக் காட்ட போராடத் துடித்தனர்.

ஸ்ரீ மஹா பெரியவாளெனும் சாத்வீக தெய்வம் எல்லோரையும் சாந்தப்படுத்தி அடுத்த நாள்முதல் பிள்ளையார் கோயிலுக்கு போய் தினமும் தேங்காய் உடைத்து அபிஷேக ஆராதனைகளைச் செய்து கொண்டு வாருங்கள் என்று அனுப்பிவைத்தார்.

பின் ஸ்ரீரங்கம் கதர்க்கடை திரு. ஏ.வி. வேங்கடராமன் என்ற அன்பரிடம் மௌனத்திலேயே ஜாடைகாட்டி விநாயகர் அகவலை எல்லோரும் பாராயணம் செய்யும்படி பத்திரிகையில் போடு என்றார் ஸ்ரீ பெரியவா. மேலும் ஔவைப்பாட்டி அருளிய விநாயகர் அகவலை புத்தகமாக அச்சிட்டு இலவசமாக எல்லோருக்கும் வழங்கும்படியும் ஸ்ரீ பெரியவா உத்தரவிட்டார்.

அதில் ஒரு ஆச்சர்யம் என்னவென்றால் திரு. வேங்கடராமனுக்கு விநாயகர் அகவல் என்று ஒரு நூல்



இருப்பது அதுவரை தெரியாதாம். அதனால் ஸ்ரீ பெரியவா சொன்னதைப் புரிந்து கொள்ளாமல் சிரமப்பட்டவரிடம் அந்த இருட்டில் மணல்மேல் தன் கையினால் எழுதிக் காட்டியுள்ளார். அப்படிச் செய்தும் அவருக்கு புரியாவில்லையாம். ஒரு ஸ்லேட்டும், குச்சியும் கொண்டுவரச் சொல்லி அதில் எழுதி காண்பித்தாராம்.

ஸ்ரீ மஹா பெரியவாளின் கையெழுத்து அச்சு எழுத்து போல் இருந்ததை பார்க்கும் பாக்யம் பெற்றதாக வேங்கடராமன் ஆனந்தமடைகிறார்.

ஆத்திச்சூடி அருளிய தமிழ்ப் பாட்டியின் விநாயகர் அகவலை வேங்கடராமனைப் போல் அப்போது எத்தனை பேர் அறியாதிருந்தனரோ!

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளெனும் தமிழ்த் தெய்வம் ஔவைப்பாட்டியின் அகவலை பரப்பியதில் தமிழும் தழைத்து ஆன்மீகமும் தழைத்துள்ளது!

❖ ❖ ❖

## 4. தமிழ் வளர்த்த தெய்வம்

புலவர்கள், பெரியோர்களோடல்லாமல் குழந்தைகளிடமும் தமிழ் வளர்த்த தெய்வம் நம் பெரியவா.

பூர்வாஸ்ரமத்தில் ஸ்ரீ பெரியவாளிடம் கைங்கர்யம் செய்யும் பாக்யம் பெற்ற ஸ்ரீமடம் பாலு அவர்கள் கண்ட காட்சி இது. நான்கு குழந்தைகளோடு ஒரு நடுவயது தம்பதியினர் ஸ்ரீ பெரியவா தரிசனத்திற்கு வந்தனர்.

குழந்தைகள் நவீன ஆடை அலங்காரத்துடன் காணப்பட்டனர். அதில் பெண் குழந்தைகளின் கூந்தல் கத்திரிக்கோலால் வெட்டிவிடப்பட்டு நுனி நாக்கில் ஆங்கிலம் விளையாட நின்றனர்.

ஸ்ரீ பெரியவா குழந்தைகளை அருகே வரச் சொன்னார்கள்.

“பேரென்ன? எங்கே படிக்கறே?” என்று கேட்டார்.

குழந்தைகள் மிக சகஜமாகி உற்சாகமாக தயக்கமில்லாமல் பதில் (ஆங்கிலத்தில்தான்) சொன்னார்கள்.

“யாருக்கு என்ன பழம் பிடிக்குமோ எடுத்துக்கோங்கோ” அன்புத் தெய்வம் சொல்ல, குழந்தைகள் குதூகலமடைந்து பழங்களை எடுத்துக் கொண்டனர்.

குழந்தைகளுக்கு “Thanks” சொல்லும் நாகரீகம் தெரிந்திருந்தது.

ஸ்ரீ பெரியவாளெனும் தமிழ்த்தெய்வமும் குழந்தைகளுக்காக “ஒரு request பெரியவா சொன்னா கேட்பேளா” என்று ஆங்கிலம் கலந்து குழந்தைகளிடம் கேட்டார்.



குழந்தைகள் ஒரே குரலில் “Oh yes! certainly we will do” என்று சம்மதித்தனர்.

குழந்தைகளுக்கு தமிழ்த்தெய்வம் அறிவுரை சொன்னார்.

“வெளி இடத்திலே பள்ளிக்கூடத்திலே அல்லது வேறு மனுஷாகிட்டே பேசறபோது இங்கிலீஷ்லே பேசலாம். உங்க வீட்டிலே அப்பா, அம்மா, அப்புறம் நான், பகவான் இவாகிட்டே தமிழ்லேதான் பேசணும்... தமிழ்தான் தாய் மொழி. தாய்தானே முதல் கடவுள். தமிழை நாம் எப்பவும் மறக்கக்கூடாது.”

குழந்தைகளும் அப்படியே செய்வதாகக் கூற “Promise” என்றனர்.

ஸ்ரீ பெரியவாளெனும் தெய்வத்தின் முகத்தில் கோடி சூர்ய பிரகாசம்! மகா பண்டிதர்களிடம் அத்வைத விசாரம் செய்யும் ஞானி வருங்கால சந்ததியினர் தமிழை மறந்து விடுவார்களோ என்றும் கவலைப்பட்டுள்ளார்.

❖ ❖ ❖

## 5. மதம், இனம் கடந்த தமிழ்ப் பற்று

இப் புத்தகத்தை எழுத நினைத்து அதற்கு அனுக்ரஹம் வேண்டி மகா பெரியவாள் தரிசன அனுபவங்கள் இரண்டாம் பாகத்தை விரித்த போது அப் பக்கத்தில் கண்ட சம்பவம் 'தமிழ்' சம்பந்தப்பட்டதாகவே இருந்ததுதான் அதிசயம்.

மேலும் இச்சம்பவம் எந்த ஜாதி, மத தொடர்பும் இல்லாமல் தமிழுக்காக மட்டுமே அத்தெய்வம் காட்டிட்ட விசேஷ அக்கறையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளதும் ஒரு சிறப்பு.

திரு. அனந்தன் அவர்கள் ஆங்கில சுருக்கெழுத்தாளர். ஸ்ரீ மஹா பெரியவாளின் கட்டளையின்படி 1966 இல் இந்து சமய அறநிலையத் துறையினரால் நடத்தப்பட்ட மடாதிபதிகள் மாநாட்டில் பேசப்பட்டவைகளை சுருக்கெழுத்தில் பதிவு செய்தவர்.

ஒரு முறை ஸ்ரீ மஹா பெரியவா ராஜா அண்ணாமலைபுரம் விஜயம் செய்தார். அங்கே குடியிருந்த அனந்தன் இரண்டு தெருக்கள் சந்திக்கும் இடத்தில் மற்ற பக்தர்களுடன் ஸ்ரீ பெரியவாளுக்கு பூர்ணகும்பம் கொடுக்க நின்றார்.

ஸ்ரீ பெரியவா அங்கே வந்ததும் இவரை குறிப்பாக கிட்டே வரச்சொல்லி "நீ எங்கே இருக்கே" என்றார். இவர் வசிப்பது நல்லப்பன் தெரு என்று சொன்னதும் அத்தெருவில் விடுவிடு வென நுழைந்தார்.

இவர் இதை எதிர்பார்க்காதவராய் ஓடிச் சென்று வீட்டில் விளக்கேற்ற ஸ்ரீ பெரியவா மேனா அங்கு வந்து நின்றாயிற்று.



"தமிழ்லே சுருக்கெழுத்து புத்தகம் எழுதறயாமே... நீ எழுதினதை எடுத்துண்டு வா பார்க்கணும்" என்றார் பெரியவா. அவருக்கோ ஆனந்தம். உடனே உள்ளே சென்று அதன் கையெழுத்துப் பிரதியை எடுத்துக் கொண்டு வந்து சமர்ப்பித்தார்.

அவசரமே இல்லாமல் அந்த கையெழுத்து பிரதியின் ஒவ்வொரு பக்கத்தையும் ஒரு மென்சிரிப்புடன் தமிழ் தெய்வம் கடைசிப் பக்கம் வரை அந்த நேரம் பார்த்து, படித்து முடித்தார். அத்தனை ஆவல் தமிழ்மேல்!

"இங்கிலீஷ் பிட்மனில் 'P' யை 'ப' ன்னு போட்டிருக்கும் 'M' ஐ 'ம' ன்னு இருக்கும். அப்படியே தமிழுக்கு ஏத்தாப்போல நீ எழுதி இருக்கே" என்று தான் அதை முழுமையான கவனத்துடன் படித்திருந்ததற்கு சாட்சி சொல்வதுபோல் கூறினார்.

பக்தருக்கு மெய்சிலிர்த்தது.

"இது அச்சாயிடுத்தோ?" பெரியவா வலிய ஆசி தர கேட்டார். இல்லை என்றதும் தன் சிரசில் இருந்த வில்வ மாலையை எடுத்து அந்த பிரதியின் மேல் வைத்து அனுக்ரஹித்தார்.

தமிழக அரசே அந்நூலை 1964 இல் வெளியிட்டு அதன்பின் 1998 இல் 4ம் பதிப்பு வெளிவந்ததாக திரு. அனந்தன் ஆனந்திக்கிறார்.

சமயம், மதம் கடந்து தமிழ் மொழிக்காகவே அத்தெய்வம் செய்துள்ள அனுக்ரஹம் இதுவல்லவா!

பின் 'தமிழ்த்தெய்வம்' என்பது பொருத்தமான சிறப்பல்லவா!

❖ ❖ ❖

## 6. காஞ்சி மகானும் கம்பராமாயணமும்

**திரு.** இஸ்மாயில் கம்பராமாயணத்தில் கரை கண்டவரென்பதை அறிவோம். ஸ்ரீ பெரியவாளுக்கு இவரிடத்தில் ஒரு தனிப்பட்ட அன்பு உண்டு.

1985ம் வருடம் அந்த ஆண்டில் வெளிவந்த இவரது இரண்டு நூல்களை ஸ்ரீ பெரியவா பார்வைக்கு எடுத்துச் சென்றார்.

'கம்பன் கண்ட சமரசம்' மற்றும் 'மூன்று வினாக்கள்' என்ற நூல்களின் அட்டையை தன் கரங்களில் தடவிய பெரியவா சமரசம் என்ற சொல்லில் தன் விரலை வைத்து "சமய ஒருமைப்பாட்டைப் பற்றி எழுதியிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

கம்பன் காப்பியத்தில் சைவ - வைணவப் பூசல்களைக் கண்டிக்கும் இடங்களையும் அந்த கட்டுரையில் எடுத்துக் காட்டியிருக்கிறேன் என்று இவர் பதிலளித்துவிட்டு நூலின் 22ம் பக்கத்தில் இடம் பெற்றுள்ள கீழ்க்கண்ட சில பாடல் பகுதியை காட்டி விளக்கினார்.

**காலையின் நறுமலர் ஒன்றைக் கட்டிய**
**மாவையின் மலர்புரை சமய வாதியர்**
**சூலையின் திருக்குஅலால் சொல்லுவோர்க்கு எலாம்**
**வேலையும் திரையும் போல் வேறுபாடு இலான்**

ஸ்ரீபெரியவா, இதனைக் கேட்டவுடன் "இதனோடு ஒத்த பாடல் ஒன்று இருக்கிறதே" என்று அது தன் நினைவிற்கு வரவில்லையே என்று கையினால் தன் சிரத்தை தட்டிக் கொண்டார்.



அப்பாடலை எப்படியாவது நினைவில் கொண்டு வந்து சொல்லிவிட வேண்டுமென்ற முயற்சி செய்பவர்போல் காட்டினார். கொஞ்சம் யோசித்துவிட்டு,

"பார் முதல் பஞ்சபூதமும் என்றும் வேறுபாடுற்ற வீக்கம்ன்னும் அந்தப் பாடல்லே வருமே" என்று பெரியவா சொல்லி விட்டு "நினைவுக்கு வருகிறதா" என்று கேட்டார்.

கம்பராமாயணத்தில் நுட்பமான அறிவைப் பெற்றவரான இஸ்மாயில் அவர்களால் மிக சிரமப்பட்டு தன் நினைவுக்கு கொண்டு வந்ததில் "வேறுபாடுற்ற வீக்கம்" ன்னு ஞாபகம் வருது. ஆனால் அந்த பாடல் நினைவுக்கு வரவில்லை என்று சொன்னார். ஸ்ரீபெரியவா மேலும் கொஞ்சம் யோசித்துவிட்டு இவருக்கு குறிப்பு கொடுத்து உதவுவதுபோல்

"'கை வில் ஏந்தி'ன்னும் அந்த பாடலிலே வரும்னு ஞாபகம்" ஒன்றும் அறியாதவர்போல் நாடகமாடினார்.

ஸ்ரீபெரியவா இப்படிக் கேட்டதும் திரு இஸ்மாயில் உடனே நூலின் 27ம் பக்கத்தில் இடம் பெற்றிருக்கும்.

**மூலமும் நடுவும் ஈறும்**
**இல்லதோர் மும்மைத்து ஆய**

என்று தொடங்கும் பாடலாக இருக்குமோ என்று நினைத்து அப்பாடலை எடுத்து படித்து விளக்கினார். ஆனால் 'கை வில் ஏந்தி' என்ற சொற்றொடர் இருந்ததேயன்றி பெரியவா குறிப்பிட்ட 'பார் முதல் பஞ்சபூதமும் வேறுபாடுற்ற வீக்கம்' என்ற தொடர் இடம் பெறவில்லை. அதனால் ஸ்ரீ பெரியவா நினைவிற்கு கொண்டு வர முயலும் பாடல் அதுவல்ல என்று தெளிவாயிற்று.

உடனே இவர் "கம்பராமாயணப் பிரதி கிடைத்தால் இப்பாடலை கண்டு பிடித்துவிடலாம்" என்றார்.

ஸ்ரீ பெரியவாளும் கைங்கர்யம் செய்பவர்களிடம் கம்பராமாயணப் பிரதி இருந்தா தேடிக் கொண்டுவரப் பணித்தார். பின்னர் தானே "கிடைக்கலேன்னா பொன்விழா மாலை இருக்கிறதான்னு பார்த்து எடுத்துட்டு

வாங்கோ” என்று உத்தரவிட்டார். உடனே ஆட்கள் தேடச் சென்றனர்.

அவர்கள் தேடி எடுத்துவரும்வரை ‘ஹிந்து மதம்’ என்ற பெயர் எப்போது வந்தது என்று திரு. இஸ்மாயில் கேட்க ஸ்ரீபெரியவா விளக்கம் தர நேரம் சென்றது.

‘பொன்விழா மாலை’ என்ற புத்தகம் கொண்டு வரப்பட்டது. அது கும்பகோணம் ‘அத்வைத சித்தாந்த சபை’ வாயிலாக அதன் பொன்விழா ஆண்டை முன்னிட்டு 1948ம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளியிடப்பட்டதாகும்.

ஸ்ரீபெரியவா அந்த நூலை தன் கையில் எடுத்து அதன் தாள்களைப் புரட்ட ஆரம்பித்தார். அத்வைத தத்துவம் பற்றி வெவ்வேறு நூல்களில் குறிப்பிட்டுள்ள கருத்துகளின் தொகுப்பாக அந்த நூல் இருந்தது.

ஸ்ரீபெரியவா, 37 ஆண்டுகளுக்கு முன் வந்திருந்த அந்த நூலின் ஒரு பக்கத்தை தேடி அந்த 114ம் பக்கத்தில் ‘கம்ப ராமாயணத்தில் அத்வைதம்’ என்ற தலைப்பில் வெ. சா. ஸ்ரீனிவாசன் என்பவர் எழுதியிருந்த கட்டுரையை காண்பித்தார். அதில் கம்பராமாயணத்தில் ‘சுந்தரகாண்டத்தில் காணப்படும்’ கடவுள் வாழ்த்துப் பாடல் கொடுக்கப் பட்டிருந்தது.

**அலங்கலில் தோன்றும் பொய்ம்மை**
**அரவு என பூதம் ஐந்தும்**
**விலங்கிய விகாரப் பாட்டின்**
**வேறுபாடு உற்ற வீக்கம்**
**கலங்குவது எவரைக் கண்டால்?**
**அவர் என்பார் கைவில் ஏந்தி**
**இலங்கையில் பொருதார் அன்றே**
**மறைகளுக்கு இறுதி ஆவார்**

அதாவது ‘உண்மைப் பொருளாகிய மலர்மாலையை பார்க்கும் பொழுது ஒளிகுன்றிய நேரத்தில் அது பாம்பாக தோன்றிய மாயை மறைந்துபோகும். அதைப் போல் வேதாந்த பொருளாகிய ராமரைக் காணும் போது நிஜம்போல் தோன்றும்



பஞ்சபூதங்களும் அவற்றின் விகாரமாகிய அண்ட கோடி சராசரங்களும் காணப்படாது நீங்கும். அப்படிப்பட்டவரே இலங்கையில் இராக்ஷதர்களோடு யுத்தம் செய்தார்’ என்ற பொருளில் அப்பாடல் இருந்தது.

ஆக ஸ்ரீ பெரியவா தன் நினைவிற்கு வராதது போல் காட்டிக் கொண்டு பாடலின் குறிப்பாக கொடுத்த சொற்றொடர்களான ‘பூதம் ஐந்தும், வேறுபாடுற்ற வீக்கம், கை வில் ஏந்தி’ என்பவைகள் இப்பாடலில் இருந்தன.

திரு. இஸ்மாயில் ஸ்ரீ பெரியவாளை இப்படி வியக்கிறார்.

“கம்பராமாயணம் எனக்கு ஓரளவு தெரியும் என்று நான் கொண்டிருந்த அகந்தைக்கு நான் பெற்ற சரியான அடியாக இதனை எடுத்துக் கொண்டேன்.

கம்பராமாயணம் படிப்பதோ அதைப் பற்றி பிரசங்கமோ ஆராய்ச்சி செய்வதோ ஸ்ரீ பெரியவாளின் பணி அன்று. இந்த அத்வைத சித்தாந்த பொன்விழா மலரில் 37 ஆண்டுகளுக்கு முன் யாரோ எழுதிய ஒரு குறிப்பிட்ட கட்டுரையில் ஒரு குறிப்பிட்ட கம்பராமாயண பாடலை நினைவிற்கு கொண்டு வருவதென்பது எப்படி ஒரு தொண்ணூற்று இரண்டு மூப்பில் பெரியவாளுக்கு சாத்யமாயிற்று.”

இப்படி கம்பராமாயணத்தை முற்றிலும் ஆராய்ச்சி செய்த திரு. இஸ்மாயில் அவர்களையே வியக்க வைத்துள்ளதால் இவரன்றோ தமிழ்த் தெய்வம் என்று போற்றச் சொல்கிற தல்லவா?

❖ ❖ ❖

## 7. ஆரியந் தமிழோட இசையானவன்

**ஆ**ரியந்தமிழோடு இசையானவன் என்று அப்பர் பரம்பொருளைப் பாடுவது போல், நம் ஸ்ரீமஹா பெரியவா ஆரியமாகிய வேதங்களையும், தமிழ் மறையாகிய திருமுறைகளையும் வளர்த்தவர் என்கிறார், தமிழ் தெய்வத்தின் திருவாக்கினால் 'தேவார டாக்டர்' என்ற பட்டம் பெற்றவர் திரு. ரா. சுப்பிரமணியன் எனும் எம்.பி.பி.எஸ். பயின்ற உண்மையான டாக்டர்!

1978 ம் ஆண்டு கர்நாடகாவிலுள்ள ஹகரிக்கு ஸ்ரீ மஹா பெரியவாளை இவர் தரிசிக்கச் சென்றார். ஸ்ரீ பெரியவா பான்யன் சிமெண்ட் கம்பெனிக்கு சொந்தமான இடத்தில் அருளிக் கொண்டிருந்தார்.

இவர் தரிசித்து நமஸ்கரித்தபோது இவரைப் பார்த்து ஸ்ரீ பெரியவா தன் இரண்டு விரல்களை சைகை காட்டினார். பக்கத்தில் கைங்கர்யம் செய்யும் ஒருவர் "இரண்டு நாள் மட்டுமே தங்கலாம்னு பெரியவா சைகை காமிக்கிறா" என்றதில் இவருக்கு ஏமாற்றம்.

வெகுநாட்கள் தங்க வேண்டுமென ஆசையுடன் வந்திருக்க இப்படி ஸ்ரீ பெரியவா சைகை காட்டியதன் அர்த்தம் அமைந்திருக்க அந்த இரண்டு நாளும் பயபக்தியுடன் ஸ்ரீபெரியவாளை தியானித்து அமர்ந்தார். பின் அவருடைய பயம் போய் பக்தி மேலிட்டதில் அங்கிருந்து இரண்டு நாட்களுக்கும் மேலாக அகலாமல் நாட்களை தரிசித்து அனுபவித்துக் கொண்டிருந்தார்.

ஆனாலும் ஸ்ரீ பெரியவாளின் கண்ணில் படாமல் தள்ளியே ஒளிந்து ஒளிந்து தரிசிப்பார். அப்படி நாட்கள்



சென்றதில் ஒரு நாள் இவர் குளித்துக் கொண்டிருக்க அந்த ஆற்றங்கரைக்கே ஸ்ரீ பெரியவா வந்துவிட்டார்.

'அடடா வகையாக மாட்டிக் கொண்டோமே' என்று இவர் பயப்படுவதற்கும் ஸ்ரீ பெரியவா இன்னும் ஊருக்கு போகலையா? என்று கேட்பதற்கும் ஒத்துப்போனது.

ஸ்ரீ பெரியவாளிடம் எப்படி பதில் சொல்வதென்று இவர் பேசாமல் நிற்க, ஸ்ரீ பெரியவா ஒரு புன்சிரிப்புடன் தான் வேடிக்கையாக கேட்டதுபோல் அகன்று சென்றுவிட்டார். ஆனாலும் டாக்டருக்கு ஆறுதலாக அங்கே ஒரு பக்தரை கொண்டு வந்து அனுக்ரஹம் நிறுத்தியிருந்தது.

திரு. டன்லப் கிருஷ்ணன் என்ற பக்தர்தான் அது! ஸ்ரீ பெரியவா கேட்டதையும் இவர் பதில் சொல்லாமல் நின்ற வேடிக்கையையும் பார்த்துக் கொண்டிருந்த திரு. கிருஷ்ணன் இவரிடம் வந்து விபரம் கேட்க இவரும் தன் மனநிலையை கூறினார்.

அதற்கு அவர் அங்கே இரண்டு மாதம் தங்கியிருக்க வந்திருப்பதாக கூறி தன் அறைக்கு அழைத்துச் சென்றார்.

இவருக்கு அப்போதுதான் ஸ்ரீ பெரியவா இரண்டு என்று சைகை காட்டியது அங்கே இவரும் இரண்டு மாதம் தங்கப் போவதைத் தான் சூட்சமமாக காட்டியதாகத் தோன்றி யிருக்கலாம்.

பின் ஸ்ரீ பெரியவாளின் சந்நிதிக்கு வந்து திரு. கிருஷ்ணன் தான் ஹம்பிக்கு போகப்போவதாக சொல்லி உத்தரவு கேட்டபோது இவரும் தானும் ஹம்பிக்கு கிருஷ்ணனுடன் செல்வதாக உத்தரவு கேட்டார்.

ஸ்ரீ பெரியவாளும் இசைய இவரும் சென்றார்.

திரு. கிருஷ்ணனுடன் செல்லும் வழிநெடுக ஸ்ரீ பெரியவாளின் உத்தரவுப்படி அவர் 12 திருமுறைகளையும் பாராயணம் செய்ய அங்கே தங்கியிருக்கப் போவதாக அறிய முடிந்தது.

அன்பு மாலை ஹகரிக்கு வந்து ஸ்ரீ பெரியவா சன்னதியில் திரு. கிருஷ்ணன் திருமறை பாராயணம் செய்ய உட்கார்ந்தார்.

அப்போது ஸ்ரீ பெரியவா இவரையும் திருமுறை வாசிக்கச் சொன்னார்.

இப்படி ஸ்ரீ பெரியவாளே தனக்கிட்ட கட்டளையால் டாக்டர் மகிழ்ந்தார். ஸ்ரீ பெரியவா தன்னையும் திருமுறை வாசிக்க உத்தரவிட்ட அந்த 27-7-1978 வியாழக்கிழமையை இவரால் மறக்க முடியாதென்று எழுதுகிறார்.

முதல் நாளில் இவர்கள் ஸ்ரீ பெரியவா சன்னதியில் தலவழிபாட்டு முறை பாடல்களை படித்தபோது ஸ்ரீ பெரியவா,

"தேவாரத்தை ஓதுவார்கள்ன்னு ஒரு குறிப்பிட்ட வகுப்பினர்தான் படிக்கிறதுன்னு எல்லோரும் நினைச்சுண்டிருக்கா. பிராம்மணர்களும் கண்டிப்பா திருமறை ஓதணும். திருஞானசம்பந்தர், கௌண்டன்ய கோத்திரத்தில் பிறந்து நான்கு வேதமும் படித்தவர் 'நான்மறை ஞான சம்பந்தன்'" என்று பல பாடல்களில் முத்திரை வைத்து பாடியுள்ளார்.

லால்குடி கோவிலில் உள்ள கல்வெட்டில் அந்தணர் தேவாரம் ஓதணும்னு பொறிச்சிருக்கு. தற்கால ஓதுவார்களுக்கெல்லாம் முதல் ஆசிரியர் லக்ஷ்மணய்யர்னு ஒருத்தர் இருந்தார். அதே மாதிரி மாணிக்கவாசகர் நியோகி ஆமாத்யப் பிராமணர்தான்."

தமிழ்மறை பற்றி இப்படி பல அரிய தகவல்களை ஸ்ரீ பெரியவா அன்று சொன்னபோது டாக்டருக்கு வியப்புண்டானது.

மற்றொரு நாள் ஸ்ரீ பெரியவா,

"ஒரு தலத்தின் மீது குறைந்தது ஒரு பதிகம் (அதாவது பத்துப் பாடல்கள்) பாடப்பட்டிருந்தால் அந்தத் தலம் பாடல் பெற்ற தலமாகும். ஒரு பதிகத்தில் ஒன்றிரண்டு பாட்டில் மட்டும் பெயர் இருந்தால் அது வைப்புத்தலம்.

திருமுறைகளில் பகல் பண்கள், இராப் பண்கள் பொதுப் பண்கள் என மூன்றுவகை. அவைகளுக்கான ராகங்கள் உண்டு. சிவபதிகங்கள் 1008. அதில் பாடல் பெற்ற க்ஷேத்திரங்கள் 275. அதே மாதிரி வைணவத் தலங்கள் 108. ஆழ்வார்கள் அவைகளைப் பற்றி பாடியிருக்கிறார்கள்.



அவர்கள் பாடின தலங்களை 'மங்களாசாஸனம் பண்ணப்பட்ட க்ஷேத்திரம்' என்று சொல்வார்கள்"

என்று ஸ்ரீ பெரியவா பல விசேஷமான செய்திகளைச் சொல்வாராம்.

மற்றொரு நாள் திருஞானசம்பந்தரின் சீர்காழிப் பதிகங்களை இவரும், திரு. கிருஷ்ணன் அவர்களும் ஸ்ரீ பெரியவா முன் பாராயணம் செய்தபோது,

"இந்த ஸ்தலத்துக்கு 12 பேர்கள் உண்டு. ஒவ்வொண்ணுக்கும் ஒரு காரணம் உண்டு. இந்த பன்னிரண்டையும் ஒரு பாட்டிலே வைத்து ஒரு பதிகம் இருக்கு. 'திரு இருக்குக் குறள்'னு பேரு. ரிக்குன்னா தெரியுமோல்யோ. அதே மாதிரி 'ரிக்' வேதத்திலே வர மாதிரியே விருத்தத்தில் (மீட்டர்லே) இந்த பாட்டுமிருக்கும் இந்தப் பதிகத்தைப் படித்தால் ரிக் வேதம் பூராவையும் பாராயணம் செய்த பலன் கிடைக்கும்"

என்று சொன்னதோடல்லாமல் இவர்கள் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் அந்த பதிகத்தை எடுத்துக் காட்டி அதை மனப்பாடம் செய்யச் சொன்னாராம்.

இவர்களும் அப்படியே அடுத்தநாள் மனப்பாடம் செய்து பாடிய போது ஒரு புன்முறுவலுடன் "சம்பந்தர் ஏராளமான பாடல்களை மேலும் மேலும் பாடியபோது அவருடைய தகப்பனார் சிவபாத ஹ்ருதயர் அத்தனையையும் தினமும் பாடமுடியாதென சொன்னார். அதற்காக ஞானசம்பந்தர் திருஏழுக்கூற்றிருக்கை என்ற பதிகத்தைப் பாடினார். இதை பாடினாலே தேவாரம் முழுக்க பாடின பலன் கிடைக்கும்."

இப்படி ஒவ்வொரு நாளும் ஸ்ரீ பெரியவா இவர்களுக்கு ஒரு தமிழ் வித்தகராக பாடல்களின் விபரங்கள், பாடல் பெற்ற ஸ்தலத்தின் புராணங்கள், தமிழ் பிரயோகங்களுக்கு சமமான ஒத்துப்போகும் சமஸ்கிருத பிரயோகங்கள் இப்படி அருளியவற்றை ஒரு ஆராய்ச்சிப் புத்தகமாக எழுதி தமிழில் பி.எச்.டி. என்ற டாக்டர் பட்டம் பெற்றுவிடலாம் என்கிறார். தேவார டாக்டர் என்று ஸ்ரீ பெரியவாளெனும் தமிழ் தெய்வத்திடம் அருள்பட்டம் பெற்ற திரு. ரா. சுப்பிரமணியன் அவர்கள்!

# 8. தமிழ்க் கவி பாடறவாளுக்கு இன்னும் விசேஷமா தரணும்

**ஸ்ரீ** மடத்தின் சார்பில் இயங்கிவரும் 'இந்து தமிழ் கவிஞர் மன்றம்' என்ற அமைப்பின் மாநில அமைப்பாளராகப் பொறுப்பேற்று புலவர் மா. வேங்கடேசன் நடத்திக் கொண்டிருந்தார்.

1987 இல் அந்த மன்றத்தின் பத்தாம் ஆண்டு நிறைவை சிறப்பாக நடத்தத் திட்டமிட்டுக் கவிதைப் போட்டிககு உயர்ந்த பரிசாக ஒரு தங்கக்காசு அளிப்பதென்று முடிவு செய்து அப்போது வட இந்தியாவில் முகாமிட்டிருந்த ஸ்ரீ புதுப் பெரியவாளிடம் விண்ணப்பித்தனர்.

ஸ்ரீ புதுப்பெரியவா ஸ்ரீ மடத்தில் மேனேஜரிடம் ஒரு தங்கக்காசு பெற்றுக் கொள்ளுமாறும் ஆண்டுவிழா நடைமுறைகளை எல்லாம் ஸ்ரீ மஹா பெரியவர்களிடம் விண்ணப்பித்து அவர்களின் அனுக்கிரஹத்தோடு நடத்திக் கொள்ளுமாறு வேங்கடேசனிடம் சொன்னார்.

அதன்படி சிறப்புப் பரிசு பற்றி அறிவிப்பை எழுதி பத்திரிகைக்கு அனுப்புவதற்கு முன் ஸ்ரீ பெரியவாளின் திருப்பார்வைக்கு வைத்தார்.

அப்போதுதான் அந்த தெய்வம் தமிழில் மேல் கொண்டிருந்த பற்று வெளிப்பட்டது.

"தமிழ்க் கவி பாடறவாளுக்கு இன்னும் விசேஷமா பரிசு தரணும்.. அதனாலே ரத்னம் பதிச்ச இன்னொரு காசும் சிறப்புப் பரிசா கொடுக்கறதா சேர்த்து எழுதி அனுப்பு" என்று உத்தரவிட்டார்.



அதைக்கேட்டு திரு. வேங்கடேசன் அவர்களுக்கு ஸ்ரீ மஹாபெரியவா தமிழ்மேலும் தமிழ்க் கவிஞர்கள் மேலும் கொண்டிருந்த கருணை எத்தகையது என்பது புரிந்ததாம்.

அந்த வருடம் ஏராளமான தமிழ்க்கவிஞர்கள் போட்டியில் பங்கு பெற்றனர். கவிஞர்கள் தேர்வு செய்யப் பட்டு பரிசளிப்பு விழா ஆண்டுவிழா நிகழ்ச்சியோடு சேர்க்கப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் ஸ்ரீ மஹா பெரியவாளிடம் கவிஞர்கள் தரிசித்து ஆசிபெறுவதிலிருந்து கவிஞர்களுக்கு ஸ்ரீ பால பெரியவர்கள் பரிசுகளை அளித்து ஆசி வழங்குவது வரை பல்வேறு நிகழ்ச்சிகளை இடையில் அமைத்து நிகழ்ச்சி நிரலை எழுதி ஸ்ரீ மஹாபெரியவாளின் பார்வைக்கு வைத்தார்.

நிகழ்ச்சி நிரலை முழுவதும் பார்த்தருளிய ஸ்ரீ மகாபெரியவா "தொண்டை மண்டலாதீன சந்நிதானத்தை விழாவுக்கு அழைக்கலையா?" என்று கேட்டார்கள். அப்போது ஸ்ரீமஹாபெரியவா தமிழ் ஆதீன மடாதிபதிகளுக்கு கொடுத்திட்ட முக்யத்துவம் வெளிப்பட்டது.

அதற்கு நிகழ்ச்சியில் நேரம் இல்லை என்றார் வேங்கடேசன்.

ஆனாலும் ஸ்ரீ மகாபெரியவா "அவரும் வரட்டும் போய்க் கேட்டுப் பத்திரிகையில் சேர்த்துடு" என்றார். அப்படியே இவர் தொண்டை மண்டலாதீன மடாதிபதி அவர்களை அழைக்க சென்றார். அவரும் ஸ்ரீ பெரியவா விருப்பப்படி கலந்து கொள்வதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

விழாவிற்கு வந்த கவிஞர்கள் எல்லோரும் ஸ்ரீ பெரியவாளை தரிசித்து மகிழ்ந்தனர். அவர்களுக்கெல்லாம் ஸ்ரீ பெரியவா உபந்நியாசம் ஒன்று நிகழ்த்தினார்.

"நீங்கள் எல்லாரும் இன்றையிலிருந்து நம்ம பழமைச் சமயாசாரங்களைக் கடைப்பிடிக்கிறதா உறுதி எடுத்துக்கணும். வெளி நாட்டாரெல்லலாம் நம்ப ஆசார அனுஷ்டானங்களை ரொம்ப உசத்தியா எண்ணிப் பின்பற்றி

வரும்போது நாமும் நம் தமிழ்க் கலாசாரத்தை விடாம கடைப்பிடிக்கணும்" என்றார்.

தமிழ் வளர்ச்சி என்பதோடு நில்லாமல், தமிழ் கலாசாரமும் பாதுகாக்கப்பட வேண்டுமென்று அத்தெய்வம் நினைத்ததாக தமிழ்ப் புலவர்களுக்கு தெளிவாகப் புரிந்தது.

ஸ்ரீ மஹாபெரியவா அதோடு நில்லாமல் கவிஞர்களை ஊக்குவிக்கும் விதமாக "நீங்க எல்லாரும் வெவ்வேறு விஷயம்பற்றி இன்னிக்கு விழாவிலே கவி பாடபோறீங்க... அதுக்கு முன்னாடி இப்போ நீங்க எல்லாரும் சிவபெருமானைப் பற்றி தோத்திரம் பண்ணி ஆளுக்கொரு கவி பாடணும்... ஏதோ டெஸ்ட் வைக்கிறதா நினைக்க வேண்டாம். என்னோட சந்தோஷத்துக்குத்தான் பாடச் சொல்றேன்" என்றார்.

பத்தே நிமிடங்களில் எல்லோரும் எழுதி அந்த 4 முதல் 8 வரிகளான கவிதைகளை ஸ்ரீ பெரியவா கட்டளைப்படி அவர்முன் பாடிக் காட்டினர்.

முப்பதுக்கும் மேற்பட்ட கவிஞர்கள் ஒவ்வொருவராக பாடிக்காட்ட மஹாபெரியவா அவைகளை பொறுமையாக கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார்.

எல்லோரும் முடித்ததும் "தேவாரம் திருவாசகம் மாதிரி உங்க பாடல்களும் கேட்கறதுக்கு ரொம்ப நல்லா இருந்தது... இப்படியே நிறைய சுவாமி பேரிலே பாடி வந்தா சுவாமி அனுக்ரஹம் உங்களுக்கு நிறைய கிடைக்கும்... சௌக்கியமா இருப்பீங்க" என்று ஆசி கூறினார்.

நிகழ்ச்சி நடந்து பத்து நாட்கள் சென்றன. அன்று மகா சிவராத்திரி தினம். திரு வேங்கடேசன் அன்று காலை ஸ்ரீபெரியவாளை தரிசிக்கச் சென்றார்.

ஸ்ரீ பெரியவா இவர் எதிர்பார்க்காத கேள்வியை கேட்டார்.

"அன்னிக்கு கவிகளெல்லாம் சிவபெருமான் பத்தி ஸ்தோத்திரம் பாடினாளே அதெல்லாம் எடுத்து வைச்சிருக்கயோ?" என்று கேட்டு வியப்பிலாழ்த்தினார்.

ஏதோ ஒப்புக்காக கவிஞர்களை அச்சமயத்தில் திருப்தி செய்வதற்காக ஸ்ரீ பெரியவா கவி இயற்றச் சொல்லவில்லை என்பது திரு. வேங்கடேசனுக்கு புரியலாயிற்று.



அப்படியே அவைகளை வைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

"அதை எல்லாம் ஒரு சின்ன புஸ்தகமா போட்டு இன்னிக்கு ராத்திரி சிவராத்திரி தரிசனத்துக்கு வர பக்தர்களுக்கு கொடுக்கணும் செய்வியா" என்றார் பெரியவா.

"பெரியவா உத்தரவு ஆனா இன்னிக்குள்ளே அத்தனை புத்தகமும் அச்சிட முடியாமான்னு சந்தேகமா இருக்கு" என்று தன் தயக்கத்தைச் சொன்னார்.

"எல்லாம் போட்டுக் கொடுப்பா போய்க் கேளு" என்றார்.

அத் தெய்வத்தின வாக்கு பலிக்காமல் போகுமா?

ஸ்ரீ பெரியவாளின் உத்தரவு என்றவுடன் அந்த அச்சகத்தார் அதை சிரமேற்கொண்டு 16 பக்க புத்தகமாக 2000 பிரதியை அச்சிட்டு இரவு 11 மணிக்கு கொடுத்தனர்.

அதை ஸ்ரீ பெரியவாளிடம் எடுத்துச் சென்ற போது அவைகளை கைலாச நாதர் கோயிலுக்கு போய் விநியோகம் செய்யும்படி உத்தரவிட்டார்.

அதன்படி கைலாசநாதர் கோயில், ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் கோயில், ஸ்ரீ கச்சபேசம், ஸ்ரீ மடம் இவைகளில் அந்த சிவபெருமான் பற்றிய கவிதைப் புத்தகங்களை விநியோகம் செய்துவிட்டு இரவு ஒரு மணிக்கு ஸ்ரீ பெரியவாளிடம் வந்து தெரிவித்தார்.

"சொன்னபடியே செஞ்சுட்டே" என்று ஸ்ரீ பெரியவா இவரைப் பாராட்டினாராம்.

தமிழையும், ஆன்மீகத்தையும் இரு கண்களாக பாவித்து ஸ்ரீகச்சபேசம் வாழவைத்திட்ட தெய்வம் அதை மறைத்து தன்னை பாராட்டியதை பெரும் அனுக்ரஹமாக அந்த தமிழ் புலவர் ஏற்றுக் கொண்டார்.

❖ ❖ ❖

# 9. தமிழ்க் கலை காத்த தெய்வம்

தமிழை மட்டுமல்ல, தமிழர்களின் பழம்பெரும் கலைகளையும் காக்கும் தமிழ்த் தெய்வம் ஸ்ரீ மகாபெரியவா என்று ஸ்ரீ ராமபாதானந்தா என்பவர் தன் அனுபவத்தில் கூறுகிறார்.

தமிழ்நாட்டில் தெருக்கூத்து என்று வழங்கப்படும் கட்டைக்கூத்து எனும் கலை நசிந்துவிடாமலிருக்க வெளிநாட்டவர் ஒருவர் அதற்கான பள்ளி ஒன்றை தொடங்க தமிழ்நாட்டிற்கு வந்தார்.

விளம்பரம் செய்தும் மாணவர் எவரும் அந்த தமிழ் கலையை பயில ஆவலுடன் விண்ணப்பிக்கவில்லை. அந்த வெளிநாட்டு அன்பர் ஸ்ரீ ராமபாதானந்தாவிடம் இதற்காக உதவி செய்ய முடியுமா என்று கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீ மகாபெரியவாளுக்கு நம் நாட்டு பாரம்பரிய கலைகளை வளர்க்கும் ஆவலுண்டு என்பதை அறிந்திருந்த இவர் ஸ்ரீ பெரியவாளின் ஆசிபெற எண்ணினார்.

வெகு விரைவாக 'ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம்' இயற்றி எடுத்துக்கொண்டு நாடகப்பள்ளி ஆசிரியராயிருந்த திரு. ராஜகோபாலனுடன் ஸ்ரீ பெரியவாளை தரிசித்து ஆசிபெற சென்றார். கூடவே பள்ளி துவக்கவிழா பத்திரிகையையும் இவர்கள் எடுத்துச் சென்று சமர்ப்பித்தனர்.

துவக்கவிழா பத்திரிகையை ஆசீர்வதித்து ஸ்ரீ பெரியவா இவர்களை அனுப்பிவிட்டு உடனேயே திரும்பவும் வரச் சொன்னார்.



ஸ்ரீ பெரியா சுந்தரமூர்த்தி நாயானர் சரித்திரம் சம்பந்தமாக பல வினாக்கள் எழுப்பினார். சில திருத்தலங்களைப் பற்றி குறிப்பிடாமல் இருப்பதை சுட்டிக் காட்டியதோடல்லாமல், அத்தலத்திற்கும் நாயன்மாருக்கு உள்ள தொடர்பை விளக்கினார். அது போதாதென்று அத்தலங்களுக்குரிய புத்தகங்களை ஸ்ரீமடத்திலிருந்து கொண்டுவரச் சொல்லி எடுத்துக் காட்டி விளக்கினார்.

ஒரு வகுப்பு நடத்தி 'ஞானோபதேசமே' செய்ததாக இவர் எழுதுகிறார்.

மேலும் இந்தப் பள்ளி தொடங்கவிருக்கும் ஊரான பெருங்கட்டூர் இனிமேல் பெரும்கூத்தூர் என்று ஆகப் போவதாய் சொன்னதும் பெரும்பாக்யம்.

இவற்றிற்கெல்லாம் மேலாக அதுவரை ஒரு விண்ணப்பமும் வராத பள்ளிக்கு துவக்கவிழா பூஜையின் போது நாற்பது மாணவர்கள் வந்து சேர்ந்ததும் ஸ்ரீ மகாபெரியவாளெனும் தமிழ்த்தெய்வம் செய்திட்ட விந்தையாக இவர் கருதுகின்றார்.

❖ ❖ ❖

## 10. இப்போது எல்லாரும் பாடறாளா?

**ஸ்ரீ** மகாபெரியவாளிடம் கைங்கர்யம் செய்யும் பாக்யம் பெற்ற திரு. இராமமூர்த்தி அவர்கள் இப்போது கோயில்களில் மார்கழி மாதம் இசைக்கப்படும் திருப்பாவை திருவெம்பாவை யின் மூலகாரணமாய் இருந்தது தமிழ்த்தெய்வம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா என்று எழுதியுள்ளார்.

அச் சம்பவத்தில் இவரும் இருந்ததே சாட்சி.

1949 இல் ஸ்ரீ மஹாபெரியவா திருவிடை மருதூரில் அருளிக் கொண்டிருந்தார். அங்கு தினமும் ஒரு அம்மாள் ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு பாடலை பாடிக் கொண்டிருந்தார்.

ஸ்ரீ பெரியவா ஒரு நாள் இராமமூர்த்தி அவர்களை பார்த்து "திருப்பாவை, திருவெம்பாவைன்னு கேள்விப்பட்டிருக்கேளா" என்று கேட்டார். இவருடன் கண்ணன் என்பவரும் இருந்தார். இவர் பதில் ஏதும் சொல்லாமல் நின்றனர்.

ஸ்ரீ பெரியவா "அந்த அம்மாள் திருவெம்பாவைதான் பாடறா" என்று சொல்லிவிட்டு தேவராஜ பாகவதர் என்பவரிடம் "இந்தப் திருப்பாவை திருவெம்பாவை பாடல்களை வெளியே பாடச் சொன்னா எல்லாரும் பாடுவாளா?" என்று கேட்கச் சொன்னார்.

அதற்கு பாகவதர் அந்த பாடல்கள் யாருக்கும் தெரியாது என்று நினைத்ததால் "இது யாருக்குத் தெரியும்? ஒருத்தரும் பாட மாட்டா... ஏன்னா யாருக்கும் தெரியாது" என்றார்.

அதைக்கேட்ட ஸ்ரீ மஹாபெரியவா அன்றே திருப்பாவை, திருவெம்பாவை மாநாடு கூட்ட தீர்மானித்துவிட்டார்.

அவ்வருடம் மார்கழி மாதம் பிறந்தது.



திரு. இராமமூர்த்தியையும் திரு. கண்ணனையும் ஸ்ரீ பெரியவா கூப்பிட்டு பிரகலாதன் என்ற யானை மீது ஏறி உட்கார சொல்லி மஹாலிங்கசுவாமி கோயிலின் நான்கு வீதிகளிலும் கையில் ஒரு விளக்குடன் புத்தகத்தைப் பார்த்து திருப்பாவை, திருவெம்பாவை பாடிவரச் சொன்னார்கள்.

இவர்களும் யானை மீதேறி அரிக்கன் விளக்குடன் மார்கழி மாதம் இப்போதெல்லாம் எல்லா கோயில்களிலும் ஒலிக்கும் பாடல்களை பாடி அத்திருப்பணியை அன்று தொடங்கி வைத்தனர்.

மார்கழி முப்பது நாளும் தப்பாது இது தொடர்ந்தது.

மகாதானத் தெரு செட்டியார் பாடசாலையில் பிறகு திருப்பாவை திருவெம்பாவை மாநாடு வெகு விமர்சையாக நடந்தது. திரு. அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் திரு. சாத்தூர் சுப்பிரமணியம் போன்ற வித்வான்கள் சங்கீத கச்சேரி நடத்தினர். திரு. கி.வா. ஜகன்னாதன் போன்ற தமிழ் புலவர்களும் சொற்பொழிவாற்றினர்.

அன்றைய அறநிலைய கமிஷனர் திரு. உத்தண்டராமன் அவர்களை அழைத்து ஸ்ரீ பெரியவா தமிழ்நாட்டு கோயில்களில் மார்கழி மாதம் திருப்பாவை, திருவெம்பாவை மாநாடு நடத்த ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

திருமதி M.L. வசந்தகுமாரி, திருமதி D.K. பட்டம்மாள் போன்றவர்கள் திருப்பாவை திருவெம்பாவை இசைதட்டுகள் மூலம் பாடினர்.

எல்லா ஏற்பாடுகளும் நடந்து முடிந்த பின் ஸ்ரீ பெரியவா இவர்களிடம்,

"ஒருத்தரும் பாடமாட்டான்னு சொன்னீங்களே இப்போது திருப்பாவை திருவெம்பாவையை யாராவது பாடறாளோ?" என்று மெல்லிய புன்னகையோடு கேட்டார்.

"பெரியவா நினைச்சா நடக்காதது உண்டா?" என்று ராமமூர்த்தியும், கண்ணனும் அந்தத் தமிழ்த்தெய்வத்தை வணங்கினர்.

ஆனால் அத்தெய்வம் அதை தான் செய்ததாக காட்டிக் கொள்ளாமல் ஒரு முறை இராமமூர்த்தியை யாரிடமோ சுட்டிக்காட்டி

"இப்போ எல்லாரும் திருப்பாவை, திருவெம்பாவை பாடறான்னா அதுக்கு இவன்தான் காரணம்" என்றார் குறும்பாக!

## 11. திருவள்ளுவர் சொன்ன இறைவன்

**திரு.** ம.வே. பசுபதி அவர்கள் சிறந்த தமிழ் ஆசிரியர்.

அவர் எழுதுகிறார் "இத் தெய்வத்தின் வாக்கை சரியாக புரிந்து கொள்ளாமல் சிலரது பேனாக்கள் பாபம் செய்கின்றன. திருக்குறளைப் பற்றி இந்த மகாஞானி அறிந்து வைத்திருந்த அளவிற்கு இதுவரை எந்த ஆராய்ச்சியாளரும் அறிந்திருக்க வில்லை என்பதற்கு இந்த நிகழ்ச்சியே சாட்சி என்ற முன்னுரையுடன் இந்த நிகழ்ச்சியை விவரிக்கிறார்.

ஸ்ரீ மஹாபெரியவா இவரிடம் ஒரு வித்தியாசமான கேள்வியைக் கேட்டார்.

"திருவள்ளுவர் என்ன சமயம்?" என்பதே அது.

இவருக்கு பதில் தெரிந்திருந்ததால் தைரியமாக சொன்னார்.

"திருவள்ளுவர் ஒரு சைவ சித்தாந்தி" என்றார்.

(இந்த பதில் சரியென்றாலும் அந்த வார்த்தை தவறென்பதை அதன்பின் 2001 இல் ஸ்ரீ ஜெயேந்திரர் இவரிடம் சைவ சித்தாந்தி என்பதை சிவாத்வைதி என்று மாற்றிச் சொல்ல வேண்டுமென்றாராம்).

இருந்தாலும் ஸ்ரீ பெரியவா இவரிடம் கேள்வி கேட்ட 9.12.1965 க்கே செல்வோம்.

ஸ்ரீ பெரியவா இவரின் பதிலை கேட்டுவிட்டு "எப்படி சொல்றே" என்று கேட்டு சற்று நிறுத்தி "இதைப் பத்தி ஒரு கட்டுரை எழுதி சாயங்காலம் எடுத்துண்டு வா" என்று உத்தரவிட்டார்.



பின் தெய்வத்தின் அருளால் நினைவிற்கு வந்த செய்திகளைத் தொகுத்து 'திருவள்ளுவரின் சமயம்' என்று ஏழு பக்கங்களில் ஒரு கட்டுரையை இவர் எழுத முடிந்தது. இரவு ஏழு மணிக்கு மீண்டும் தரிசன பாக்யம் கிடைத்தது.

தாமரைக் கண்ணான், அடியளந்தான் என திருக்குறளில் திருமாலைப் பற்றி வருகின்றன. கடவுள் வாழ்த்தில் திருவடிப் பெருமை - இந்திரனே சாலும் கரி என வருவது - 'உலகியற்றினான்' என வருவது எண்குணத்தான் என இறைவனை குறிப்பது - என வருபவைகளை குறிப்பிட்டு இவர் கட்டுரை எழுதியிருந்தார்.

ஸ்ரீ பெரியவாளிடம் இதைச் சமர்ப்பித்தபோது

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவ னடிசேரா தார்"**

என்ற திருக்குறளை இவர் சொன்னதும், நிறுத்தச் சொல்லி தன் திருக்கரங்களை ஸ்ரீ பெரியவா அசைத்தார்

"திருவள்ளுவர் காலத்திலே 'இறைவன்'னு சொன்னா அது சிவன்னுதான் அர்த்தம்" என்று அருளினார்.

இவருக்கு அப்போது ஒன்று நினைவிற்கு வந்தது. திருக்குறளுக்கு முதன்முதலில் உரை எழுதிய பரிதியார் "சிவனின் ஸ்ரீ பாதங்களை சேராதார் பிறவியாகிய பெரிய கடலை நீந்திக் கடவார்" என்ற உரை ஞாபகம் வர அதை ஸ்ரீ பெரியவாளிடம் கூறினார்.

அதைக் கேட்டுவிட்டு ஸ்ரீ பெரியவா,

"நிகண்டுகள் பார்த்திருக்கயா? அதிலே எல்லாம் இறைவன்னா சிவன்னுதான் அர்த்தம் இருக்கும். வேற அர்த்தங்களும் இருக்கு... தெய்வ பெயர்களிலே அதுக்கு சிவன்னுதான் அர்த்தம்"

திருவள்ளுவரின் சமயம் இது என கண்டறிய எந்த ஆராய்ச்சியாளரும் இது நாள் சொல்லாத ஒரு வழியை ஸ்ரீ பெரியவா சொன்னதாக இவர் மகிழ்ந்து அடுத்த நாள் சென்னையில் உள்ள பிரெஞ்ச் நூலகத்திற்குச் சென்று

நிகண்டைப் பார்த்தார். சூளாமணி, திவாகரம், பிங்கலந்தை, ஆசிரிய உரிச்சீர் நிகண்டு என பல நிகண்டுகள் இருந்தன. அதில் 'இறை சிவன் கடன் வேங்கை' என சூத்திரம் இருந்தது. ஆறாம் நூற்றாண்டு வரை இறை என்ற சொல்லுக்குச் சிவன் என்று மட்டுமே கடவுட் பொருள். வேறு கடவுளர்களை அச்சொல் அதுவரை சுட்டவில்லை என இவர் அதில் படித்து அறிந்தார்.

ஸ்ரீ மஹாபெரியவா எவ்வளவு ஆழமாக நுணுக்கமாக திருக்குறளை அறிந்து வைத்திருக்கிறார் என்பது இவருக்கு வியப்பளித்தது.

தமிழ்த் தெய்வமல்லவா நம் பெரியவா!

❖ ❖ ❖



# 12. வில்லிசைக்கு ஆசி

**க**விஞர் சுப்பு ஆறுமுகம் அவர்களின் அனுபவம் இது.

சென்னை வானொலி நிலையத்தில் மகாத்மா காந்தி கதையை வில்லிசையாக்கி திரு. சுப்பு ஆறுமுகம் அந்த புத்தகத்தை ஸ்ரீ பெரியவாளை தரிசித்து சமர்ப்பித்தார்.

அவர் கண்ணுக்கு ஸ்ரீ மகா பெரியவா சர்வேஸ்வரராக காட்சி தந்ததாக எழுதியுள்ளார். மேலும் அவர் தென்னாடுடைய சிவன் அல்லவா. ஆகவே ஒரு தமிழ்த்தெய்வமாய் இருந்ததால் இவரிடம் "நடக்கப் போகிற ஆகம சில்ப சதஸிலே நீ திருநாவுக்கரசர் சரித்திரத்தை வில்லுப் பாட்டாகப் பாடு" என்று அன்பு கட்டளையாக அருளியுள்ளார்.

பெருமகிழ்ச்சியுடன் தமிழ் சைவ சமய நாயன்மாரின் புகழை வில்லுப்பாட்டாக பாடிப் பரவிடும் திருப்பணியை தமிழ்த்தெய்வம் தனக்கு அளித்த பாக்யமாக கருதிய சுப்பு ஆறுமுகம் ஒரே இரவில் 63 பண்களில் வில்லுப்பாட்டு எழுதி முடித்தார்.

நிகழ்ச்சியன்று கையெழுத்துப் பிரதியுடன் பாட உட்கார்ந்தபோது தமிழ்க்கவிஞரை உற்சாகப்படுத்தும் கருணையோடு அத்தெய்வம் மேடைக்கே வந்து ஆசீர்வதித்து அருளியதாக கவிஞர் உணர்ச்சிவசப்பட்டு கூறுகிறார்.

மேடையிலிருந்தே ஒரு கோயில் கோபுரத்தை பார்த்து கும்பிடுவதுபோல் ஸ்ரீ பெரியவாளை கைகூப்பி நமஸ்கரித்து அன்று தொடங்கிய வில்லிசைதான் நம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழையும் சைவ சமயத்தையும் முழங்கிக் கொண்டிருப்பதாக கவிஞர் எழுதியுள்ளார்.

(நன்றி : மகா பெரியவா தரிசன அனுபவங்கள்)

## 13. நீதான் தமிழ்க் கவிஞனாச்சே!

**திரு.** டி.வி. சுவாமிநாதன் ஓய்வு பெற்ற ஐ.ஏ. எஸ். அதிகாரி.

ஒரு முறை திருப்பதி ஏழுமலையானை தரிசித்துவிட்டு காஞ்சியில் ஸ்ரீமஹாபெரியவாளை தரிசிக்க வந்தார்.

திருப்பதி பிரசாதங்களை சமர்ப்பிக்க ஸ்ரீ பெரியவா ஏற்றுக்கொண்டார். பின் இவர் பெருமாளை தரிசித்ததை பெரியவாளிடம் அகமகிழ்ந்து விவரித்தார்.

“வேங்கடவன் எப்பவும் நகை எல்லாம் போட்டுண்டு குண்டா குட்டையாதான் தரிசனம் பண்ணியிருக்கேன். இன்னிக்கு புருஷசூக்தம்திருநாமங்கள் ஜபித்து அபிஷேகம் செய்வதை தரிசித்த பாக்யம் கிடைச்சது. அப்போ பெருமாளை பார்க்கும்போது ஒல்லியா நெடிதுயரமாக காட்சி தந்தார். மனசு நெலைச்சு பிரார்த்தனை பண்ணின்டேன்” என்றார் பக்தியோடு.

கேட்டுக் கொண்டிருந்த தமிழ்த்தெய்வம்,

“நீ தமிழிலே கவிஞனாச்சே... அங்கே அபிஷேகம்ன்னா சொன்னா” என்றபோது சுவாமிநாதனுக்கு சிலிர்த்தது எத்தனை கவனமாக நான் சொல்லியதை தெய்வம் கேட்டுள்ளார். இவருக்கு சிலிர்த்தது.

சுதாரித்துக் கொண்டு “அவா அபிஷேகம்னு சொல்லமாட்டா..... திருமஞ்சனம்ன்னு சொல்லுவா” என்றார்.

ஸ்ரீ பெரியவா விடுவதாகத் தெரியவில்லை.



“திருமஞ்சனம்னா என்ன அர்த்தம் தெரியுமோ?” என்று கேட்க இவர் “பெரியவா சொன்னா தெரிஞ்சுக்கறேன்” என்றார்.

ஸ்ரீபெரியவா “அஞ்சனம்னா எண்ணெய் தடவறது... மெய் அஞ்சனம்னா உடம்புக்கு எண்ணெய் தடவறது... திருமெய் அஞ்சனம்ன்னா பகவான் திவ்யமேனிக்கு எண்ணெய் தடவறது.. இதுதான் மருவி ‘திருமஞ்சனம்’” ஆகியிருக்கு என்று விளக்கினார்.

திரு. சுவாமிநாதன் கண்ணுக்கு அந்த ஸ்ரீ மஹாபெரியவா திருஉருவில் தமிழ்த் தாய் காட்சியருளியிருக்க வேண்டும்.

❖ ❖ ❖

# 14. யாரும் அறியாத அப்பர் பெருமானின் சேதி

**ஹ**கரி என்ற ஊரில் நதியின் கரையில் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு கோயில் வளாகத்தில் ஸ்ரீ பெரியவா அருளிக் கொண்டிருந்தார்.

அது வடதேசமாயினும் தமிழ்த்தெய்வமான ஸ்ரீ பெரியவா திரு. டன்லப் கிருஷ்ணன் என்ற பக்தரை தேவாரம் படிக்கச் சொல்லி கேட்டுக் கொண்டிருந்தார்.

மூவர் தேவாரம் பல உண்டு. கிருஷ்ணன் அங்கேயே தங்கி ஸ்ரீ பெரியவாளுக்கு அவைகளை படித்துக் கொண்டிருந்தார். அப்பர் சித்திரை மாதம் சதய நக்ஷத்திரத்தன்று முக்தி அடைந்தார். முத்தி அடைந்த இடம் திருப்புகலூர் ஆகும்.

இதைப்பற்றி ஸ்ரீ பெரியவா பேசினார்.

“உனக்குத் தெரியுமோ அப்பருக்கு திருப்புகலூரில் முக்தி கர்ப்பக்ருஹத்தினுள் அப்பர் புகுந்தார். பின் திரும்பி வரவில்லை. இது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் தெரியாத ஒண்ணு உண்டு. சுவாமி சிங்கமாக வந்து அவரை அப்படியே கடித்து சாப்டுட்டார் (பெரியவா சொன்ன அதே வார்த்தை) ‘அப்பனே எனக்கு வலிக்கிறதே’ என்று நாவுக்கரசர் சொன்னார். அதற்கு சுவாமி ‘எனக்கு நீ இனிக்கிறாய்’ என்றார். (அந்த கோயில் கர்ப்பக்ருஹத்தில சிவலிங்கத்தின் பின்னால் புடைப்பு சிற்பம் இருந்ததாக தகவல்)

இப்படி ஸ்ரீ பெரியவா சொன்னது வியப்பாயிருந்தது.



மேற்கண்ட இச்சம்பவத்தை எழுதியிருக்கும் திரு. சிதம்பரேசன் என்ற பக்தர் வீடு திரும்பியதும் அப்பருடைய திருப்புகலூர் தேவாரத்தை எடுத்துப் பார்த்தார்.

அங்கே மூன்றாம் திருமுறை 99வது பதிகத்தில் திருப்புகலூர்த் திருத்தாண்டகத்தில் “எண்ணுகோன்” என்று ஆரம்பித்த பதிகத்திலே,

**அங்கமே பூண்டாய் அனலாடினாய், ஆதிரையாய்**
**ஆனிழலாய், ஆனேறூர்ந்தாய்**
**பங்கமொன்றில்லாத படர் சடையினாய் பாம்பொடு**
**திங்கள் பகைதீர்த்தாண்டாய்**
**சங்கை யொன்றின்றியே தேவர் வேண்டச்**
**சமுத்திரத்தினஞ்சுண்டு சாவா மூலாச்**
**சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்**
**பூம்புகலூர் மேவிய புண்ணியனே**

“இந்த விஷயத்தை நான் எங்கும் கேட்டதில்லை. படித்ததுமில்லை. புடைப்புச் சிற்பம், அப்பர் சுவாமியை சிங்கமே என்று விளிப்பது இரண்டை தவிர தமிழ்த் தெய்வமாக ஸ்ரீ பெரியவாளின் வாக்கே மூன்றாவது ஆதாரம்” என்று திரு. சிதம்பரேசன் எழுதியுள்ளார்.

❖ ❖ ❖

## 15. திருமுதுக்குன்ற பதிகம் பாடு

**தே**வாரம் ஓதுவார்களிடம் அந்த தமிழ்த்தெய்வத்திற்கு அலாதி பிரியம். வடமொழியில் மட்டுமே பாண்டித்யம் பெற்றவராக உலகம் நினைத்துக் கொண்டிருக்க தேவாரத்தில் பல நுணுக்கமான அம்சங்களை ஸ்ரீ பெரியவா அறிந்துள்ளதை ஓதுவார்கள் அறிவர்.

பிரம்மஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மாரின் இல்லத்தில் அமைந்திட்ட திருகோயிலில் தினமும் தேவாரம் பாடுபவதை காஞ்சி நடராஜ ஓதுவார் பாக்யமாக அடைந்திருந்தார்.

இவர் ஸ்ரீ மஹா பெரியவா பல்லக்கில் அமர்ந்து சென்ற காலகட்டங்களிலேயே தேவாரங்களை பாடிச் செல்பவர். ஒருமுறை ஸ்ரீ பெரியவ காஞ்சி பிள்ளையார் பாளையம் திருஞானசம்பந்தர் கச்சிமேற்றளிக்கு எழுந்தருளினார்.

ஓதுவார் திருமேற்றளி தேவாரம் பாடினார்.

ஸ்ரீ பெரியவா வெறுமனே அதை கேட்டுவிட்டு பிரசாதம் கொடுத்து அனுப்பவில்லை. ஓதுவாரை ஊக்குவிப்பது போலவும் அதே சமயம் தன் தேவார ஞானத்தை மறைமுகமாக காட்டுவது போலவும்,

"திரு முதுக்குன்ற பதிகம் பாடு" என்றார்

ஓதுவாரும் அந்த ஞானசம்பந்தரின் தேவாரத்தை பாடினார்.

பின்னர் திருஏகம்பம் பதிகம் பாடும்படி உத்தரவானது.

பண்டு செய்த பழவினையின் பயன் என்று தொடங்கும் அப்பர் தேவாரத்தை ஓதுவார் பாடி ஆனந்தமடைந்தார்.



ஸ்ரீ பெரியவா மகிழ்ந்து ஆசி கூறியபோது ஓதுவாருக்கு கோயிலின் கருவறைத் தெய்வமே ஆசி கூறுவது போலிருந்தது.

ஒருமுறை சதாராவிற்கு இவருடன் இரண்டு ஓதுவார்கள் பெரியவா தரிசனத்திற்கு சென்றனர். இவர்களை பார்த்ததும் தமிழ்த்தெய்வத்திற்கு சந்தோஷம். இரண்டு நாள் தங்கி பூஜையின் போது தேவாரம் பாடும்படி உத்தரவு அருளினார்.

இரண்டுநாள் கழித்து இவர்களுக்கு வேஷ்டி சன்மானம் வழங்கியதோடு ஒரு வேன் மூலம் இரயில் நிலையத்திறகு கொண்டுவிடவும் பெரியவா உத்தரவிட்டாராம்.

தமிழ்த்தெய்வம் தமிழுக்கும், ஆன்மிகத்துக்கும் காட்டிய மரியாதை அது!

❖ ❖ ❖

## 16. வெற்றிலை

**கா**ஞ்சியில் சிவாஸ்தானத்தில் ஸ்ரீ பெரியவா அருளிக் கொண்டிருந்தபோது தாவரவியலில் டாக்டர் பட்டம் வாங்கிய ஒரு பையன் தரிசிக்க வந்தான்.

ஸ்ரீ பெரியவா அவனிடம் “வெற்றிலைக்கு அப்படி ஏன் பேர் வந்தது தெரியுமோ” என்றார்.

தாவரவியலில் Research செய்த பையனுக்கு இதற்கான பதில் தெரியவில்லை.

“தெரியலையே” என்றான் வெட்கத்துடன்.

ஸ்ரீ பெரியவா “வெற்றிலைங்கறது ஒரு கொடி. எல்லா கொடியிலும் பூத்து காய்த்துப் பழம் விடும். சிலகொடியிலே காய்க்காம போனாலும் பூவாவது பூக்கும். பூக்கூட ஏற்படாத கொடி ஒண்ணுமில்லே... ஆனா வெத்தலை கொடியிலே பூவும் பூக்காது காயும் காய்க்காது. வெறும் இலைமட்டுமே இருக்கறதாலே இக் கொடிக்கு வெற்றிலைன்னு பேர் வந்தது.”

பெரியவாளுக்கு தாவரவியலில் டாக்டர் பட்டம் கொடுக்கலாமா? இல்லை தமிழ்ப்புலமைக்குக் கொடுக்கலாமா?

❖ ❖ ❖



## 17. அருளோடு நிறைய எழுது

**கா**மாக்ஷிதாசன் எனும் அடைமொழியுடன் விளங்கும் ஸ்ரீ.வி. ஸ்ரீநிவாஸன் அவர்கள் தனக்கு ஆனா, ஆவன்னாவுக்கு அடுத்த எழுத்து தெரியாத நிலையிருக்க காமாட்சி அகவலை எழுத வைத்த தமிழ்த் தெய்வம் ஸ்ரீ பெரியவா என்று ஒரு சம்பவத்தைக் கூறுகிறார்.

1918 முதல் 1938 வரை ஸ்ரீ மஹாபெரியவா ராமேஸ்வரம் காசி விஜயம் யாத்திரை செய்த வருடங்களில் இவருடைய தந்தை ஸ்ரீ வெங்கடராம ஐயர் ஸ்ரீ பெரியவாளுக்கு கைங்கர்யம் செய்யும் பாக்யம் பெற்றவர்.

அதன் நற்பலன்களை இவர் அனுபவித்ததாக கூறும் இவருக்கு 1958 இல் 19ம் வயதில் ஒரு இரவில் தூக்கம் வராமல் விழிப்பு ஏற்பட்டுவிட்டது. ஒரு புத்துணர்ச்சி புகுந்து கொண்டதுபோல் விசித்திரமான உணர்விற்கு ஆட்பட்டார்.

தமிழில் சொற்ப ஞானமே இருந்த இவருக்கு அந்த இரவில் ஏனோ ஒரு தமிழ்க் கவிதை எழுதவேண்டும் என உத்வேகம் உண்டாயிற்று.

அது அடக்கமுடியாத தவிப்பாகி யாரோ இவரை இயக்குவதாக உணர்ந்து ஒரு காகிதத்தை எடுத்து எழுதவே ஆரம்பித்து விட்டார்.

முன்பின் கதை, கவிதை, கட்டுரை என தானாக சொந்தமாக அதுவரை எழுதியோ அல்லது எழுத ஆசைப் பட்டதோ இல்லாத நிலையில்

'ஸ்ரீ காஞ்சி நகர் வாழ் கன்னிகை போற்றி' என்ற முதல்வரி தொடங்கி அன்றிரவுக்குள் ஒரு ஆவேச நிலையில் ஆயிரம் போற்றிகள் எழுதி முடித்துவிட்டார். நிச்சயமாக அதை தான் எழுதவில்லை. ஏதோ ஒரு சக்தி தன்னை ஒரு கருவியாக எழுதவைத்துள்ளதென்பதை உணர்ந்தார்.

கூடவே ஸ்ரீ மஹாபெரியவாளைத் தரிசிக்க வேண்டும் என்றும் தோன்றியது. சென்னையில் அருளிக் கொண்டிருந்த ஸ்ரீ பெரியவாளை தரிசித்து நின்றார். அப்போது பல பேரறிஞர்கள் சூழ்ந்திருக்க ஸ்ரீ பெரியவா "நீ எழுதியதை படி" என்றார். நிசப்தமான சூழ்நிலையில் படித்து முடித்தார்.

தெய்வம் என்ன சொல்லப் போகிறாரோ என்று இவர் ஆவலுற இவரை இயக்கிய ஸ்ரீ பெரியவாளெனும் தமிழ்த் தெய்வம்,

" நீ இதற்காகவே பிறந்தவன். அருளோடு நெறைய எழுதிண்டே இரு" என்று சொல்லி தினமும் மூன்று கால பூஜை செய்யவும் ஸ்ரீ தேவி மாகாத்மியம் பாராயணம் செய்யவும் உத்தரவிட்டார்.

அதற்கு இவர் தனக்கு பூஜை பற்றியெல்லாம் ஒன்றுமே தெரியாது என்று சொல்ல ஸ்ரீ பெரியவாளோ "காமாட்சி அகவலை எப்படி எழுதினாயோ அது போலவே பூஜை-பாராயணமெல்லாம் தானா வரும்" என்று திரும்பவும் தன் தெய்வ சக்தியால்தான் இவர் கவிதை எழுதியதை உணர்த்தினார் அந்தத் தமிழ்த்தெய்வம்.

❖ ❖ ❖



## 18. 'சர்மகஷாயம்' ன்னா என்ன?

புலவர் ந. வேங்கடேசன் வில்லியனூரைச் சார்ந்தவர். அந்த ஊரில் 'இந்து தேவாலயம் திருத்தொண்டு சபை' என்ற அடியவர் திருக்கூட்டம் இயங்கிவருகிறது. ஒவ்வொரு சோமவாரத்திலும் ஒரு சிவன்கோயிலுக்குச் சென்று உழவாரப் பணி செய்வார்கள்.

அப்படி ஒருமுறை காஞ்சி சென்றபோது குழுவினர் ஸ்ரீ மஹாபெரியவாளை தரிசிக்க சென்றனர். அப்போது சிதம்பரம் தீட்சதர்கள் சிலரும் வந்திருந்தனர். அவர்கள் குப்பாபிஷேகத் பத்திரிகை சமர்ப்பித்து ஆசி பெற நின்றனர்.

ஸ்ரீ பெரியவா கும்பாபிஷேக பத்திரிகையைப் படித்தார். பத்திரிகையின் கடைசி பாராவின் 'சர்மகஷாயத்தால் திருமுழுக்குச் செய்யப் பெறும்' என்ற வரி காணப்பட்டது போலும்.

அதை சுட்டிக் காட்டிய பெரியவா "சர்மகஷாயம் ன்னா என்ன யாருக்காவது தெரியுமோ" என்று கேட்டார்.

ஒரு மடத்து சிப்பந்தி "அது தமிழ் வார்த்தை" என்றார். ஆனால் ஸ்ரீ பெரியவா அதை ஒப்புக் கொள்ளாமல் "இங்கே தமிழ் நல்லா படிச்சவா யாராவது இருக்காளா" என்று கேட்க யதேச்சையாக இவர்களுள் புலவரும் இருக்க நண்பர்கள் இவரை சுட்டிக் காட்டினர்.

நண்பர்கள் இவரை முன்னுக்குத் தள்ள ஸ்ரீ பெரியவா

"புலவரே சர்மகஷாயம்னா என்ன?" என்று கேட்டார் இவருக்கு சிலிர்ப்பு உண்டாயிற்று.

“சுவாமி அது வடமொழிச் சொல். நான் பொருள் அறியேன்” என்றார் புலவர்.

ஸ்ரீ பெரியவா ஒருமுறை அனைவரையும் நோக்கினார்.

“சர்மகஷாயம் என்பது தமிழ்னு ஒருத்தர் சொல்றார். இவரோ சமஸ்கிருதம்னு சொல்றார்” என்று ஆரம்பித்து சற்றே நிறுத்தி விட்டு “அது சமஸ்கிருத வார்த்தைதான். அந்த கஷாயம் எப்படி செய்றான்னா பால் துளிர்க்கிற மரபட்டைகளை சேத்து, இடிச்சி தண்ணீலே ஒரு மண்டலம் ஊற வைப்பா. அந்த கஷாயத்தை கலசங்களிலே நிரம்பி, வேதிகையில் வைச்சு பூஜை பண்ணுவா. அந்த மரப்பட்டை கஷாயத்திலே சில மூர்த்தங்களையும் கும்பங்களையும் அபிஷேகம் பண்ணுவா.”

ஒவ்வொரு வாக்கியத்திலும் இடைவெளிவிட்டு பாலகரும் புரிந்து கொள்ளும் விதத்தில் ஸ்ரீ மஹாபெரியவா விளக்கியதை பார்த்த புலவருக்கு வியப்பாக இருந்தது.

‘பால் துளிர்க்கும் மரம்ன்னா என்ன தெரியுமோ ஆலமரம், அரசமரம், அத்தி, பலா’ இப்படி விளக்கினாராம்.

இன்னொரு முறை வடநாட்டிலிருந்து வந்த பக்தர்கள் தங்கள் கோயில் கருவறை சிலை பின்னமாகி போனதால் வேறு புது மூர்த்தம் வைக்க உத்தரவு கேட்க ஸ்ரீ பெரியவா அதை மறுத்தார். அதற்கு ஸ்ரீ பெரியவா மேற்கோள் காட்டி பல நூல்களை சொன்னாராம். அப்படி பட்டியலிட்ட பல நூல்களையும் அந்த குறிப்பு உள்ள பக்கங்களையும் ஸ்ரீ பெரியவா சரளமாக சொல்லிக் கொண்டே போனதை வியப்போடு புலவர் பார்த்து ரசித்து வியந்தாராம்.

ஸ்ரீ பெரியவாளே கலைமகள் என்று அவருக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

❖ ❖ ❖



# 19. தமிழ் வேதாந்தம்

**ச**ங்கரி பாட்டி என்ற பக்தைக்கு வடமொழி ஒரு அட்சரமும் தெரியாது. ஆனால் தமிழில் பல வேதாந்த நூல்களை படித்துள்ளார். கைவல்ய நவநீதம், உள்ளது நாற்பது போன்ற நூல்கள் மனப்பாடம்.

தமிழ்த் தெய்வமாம் ஸ்ரீ பெரியவா இந்த பாட்டியின் தமிழையும், வேதாந்த அறிவையும் சபை கூட்டி அறியச் செய்ய வேண்டுமென நினைத்தாரோ என்னவோ

ஸ்ரீ பெரியவாளைத் தரிசிக்கச் சென்றபோதெல்லாம் சேர்ந்தாற்போல் ஸ்ரீ பெரியவா நாலைந்து வார்த்தைகள் கூட பாட்டியிடம் பேசியதில்லை.

ஒருநாள் பிற்பகலில் சங்கரிபாட்டி மடத்திற்கு வந்தார். ஸ்ரீ பெரியவாளை சுற்றி பல வடமொழி பண்டிதர்கள் நிற்க பாட்டி நமஸ்கரித்தாள்.

ஸ்ரீ பெரியவா உட்காரும் படி ஜாடை காட்டினார். பாட்டி தயங்கி அடக்க ஒடுக்கமாக உட்கார்ந்தார்.

“தமிழிலே வேதாந்தம் படிச்சிருக்கேளே.... கொஞ்சம் சொன்னா இவாளெல்லாம் கேட்பா.”

பாட்டிக்கு படபடப்பு. இருந்தாலும் தெய்வமே கேட்டுக் கொண்டதால் பரம சந்தோஷமாக தனக்குத் தெரிந்த படித்த நூல்களிலிருந்து பாடல்களை கூறி விளக்கமும் கூறி வேதாந்த விசார சொற்பொழிவு போன்று பேசி முடித்தார்.

ஸ்ரீ பெரியவாளும் அதை உன்னிப்பாக கவனித்து நடு நடுவே தாயுமானவர் பாடல்களை சிலவற்றை கூறி பாட்டி

சொன்ன தத்துவங்களுடன் இணைந்து போவதை விளக்கினார்.

வெகுநேரம் பாட்டி விளக்கி முடித்தபோது ஸ்ரீ பெரியவா "இன்னிக்கு நல்ல பொழுதாபோச்சி... தமிழ்லே நல்லா புரியறமாதிரி வேதாந்தம் சுலபமாக இருக்கு" என்றார்.

எத்தனையோ மகா மகா பண்டிதர்களுடன் தத்துவதர்க்கம் செய்யும் தெய்வமாம் ஸ்ரீ பெரியவா சங்கரி பாட்டிக்கும் தமிழுக்கும் கொடுத்த சான்றிதழ் போல் இது அமைந்தது.

❖ ❖ ❖



# 20. மகான் விளக்கும் மாதத்தின் பெயர்கள்

தமிழிலுள்ள மாதப் பெயர்களுக்கு தமிழ்த்தெய்வமாம் ஸ்ரீ மகா பெரியவா சொல்லும் விளக்கங்களைப் பார்க்கலாம்.

முதல் மாதம் சித்திரை. இம்மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் பௌர்ணமி வரும். அடுத்தது வைசாகம் தமிழில் வைகாசி. மதுரை, மருதை ஆவதுபோல வைசாகம், வைகாசி யாகியுள்ளது.

அடுத்த மாதத்தில் பௌர்ணமி அநுஷ நட்சத்திரத்தில் வரும். அநுஷ நட்சத்திரத்தை 'அநுஷீ' என்பார்கள். அதுவே 'ஆனி' ஆகியுள்ளது.

பூராடம், உத்திராடம் என்பவைகளை பூர்வாஷாடம் உத்ராஷாடம் என்ற வடமொழியிலிருந்து வந்தவை. அவற்றின் தமிழ் திரிபு. இவ்விரு நட்சத்திரங்களும் 'ஆஷாடம்' என்ற ஒன்றின் முன்பின் பகுதிகளாகும்.

ஆஷாடப் பூர்ணிமையின் தொடர்பு கொண்ட மாதம் 'ஆஷாடீ' அதுவே 'ஆடி.'

ச்ரவணம் எனும் நட்சத்திரம் தமிழ் 'ஓணம்' ஆகிறது. 'சர்மணர்' என்பவர் 'சமணர்' என்று ஆகி 'அமணர்' என்று ஆனதுபோல! அது திருமால் நட்சத்திரமானதால் அதற்குக் திரு சேர்த்துத் திருவோணம் என்றே தமிழகத்தில் சொல்வது. மலையாள தேசத்தில்தான் ஓணம் என்று மட்டுமே சொல்லி ச்ராவண மாதத்தில் அந்த நட்சத்திரம் நிகழும் நாளில் விசேஷமாக ஓணம் பண்டிகை கொண்டாடப்படுவது வழக்கம்.

அன்றுதான் மஹா பலியை வென்ற வாமனாவதாரனின் பிறந்த நாள் 'சிராவணி' என்பதே நமது 'ஆவணி'

ஓணம் திருமாலுக்குரியதென்பதால் 'திருவோணம்' என்று சொல்வதுபோல் 'ஆதிரை' சிவபெருமானுக்கு உகந்ததாய் இருப்பதால் அதற்கும் திரு ஆதிரை என்று நட்சத்திரங்களுக்குள் இவ்வாரு நட்சத்திரங்களுக்கு மட்டுமே தமிழில் 'திரு' என்ற சிறப்பு என்கிறார் தமிழ்த்தெய்வம்.

27 நட்சத்திரங்களில் 25வது 26 வதாகவுள்ள பூர்வ ப்ரோஷ்டபதி, உத்தர ப்ரோஷ்டபதி என்பர். முன்னது தமிழில் பூரட்டாதி பின்னது உத்திரட்டாதி என விசித்திர உருமாற்றம் கண்டுள்ளன. மாதப் பெயராக வரும்போது இது மேலும் விச்சித்திரமாகி 'பூரட்டாதியே' புரட்டாசி ஆகியுள்ளது.

அச்விநி நட்சத்திரத்தின் அடியாக 'ஆச்விநி' எனப்படும், அடுத்த மாதமோ 'ஐப்பசி'யாகி விட்டது.

இப்படி பல மாதப் பெயர்கள் பெரும் உருமாற்றம் பெற்றபின் 'க்ருத்திகா' நட்சத்திர தொடர்புள்ள 'கார்த்திகா' மட்டும் கார்த்திகை என்று மாறாமல் அமைந்துவிட்டது.

அடுத்தமாதம் மார்கழி! ம்ருகசீர்ஷ நட்சத்திரம் மார்க்கசீர்ஷி என்றாகி மார்கழி ஆயிற்று.

தையின் கதை பார்ப்போம். இங்கேயும் ஒரு விசித்திரம். 'புஷ்யம்' என்ற நட்சத்திரத்திற்கு 'திஷ்யம்' என்றும் பெயருண்டு. 'பூச' நட்சத்திரம் என்பது 'புஷ்ய'மே. இதில் அவ்வளவாக விசித்திரமில்லை. மாதப் பெயராக வரும்போதுதான் விசித்திரம். இங்கு 'புஷ்ய' என்பதை வைத்து மாதத்தின் பெயர் வராமல் 'திஷ்ய' என்பதை வைத்து வந்துள்ளது. திஷ்ய த்தின் அடி வந்த 'தைஷீ' யையே எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதில் ஆநுஷீ, ஆஷாடீ ஆகியவற்றைப் போல் 'ஷ' காரமான இரண்டாம் அக்ஷரத்தை அடியோடு அகற்றி 'தை' என்று மட்டுமே வைத்துக் கொண்டிருக்கிறோம்.

அதற்கடுத்த 'மக' நட்சத்திர சம்பந்தமான 'மாகீ' மாஸம் 'மாசி' ஆகியுள்ளது.



பல்குணம் என்பது இருபிரிவுகளாக பூர்வ பல்குனி, உத்தர பல்குனி என்று உள்ளது. 'பூர்வ பல்குனி' தமிழில் அதில் முக்கியமான பாகமான 'பல்குனி'யையே தள்ளிவிட்டு 'பூர்வ' த்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு அதையும் திரித்துப் 'பூரம்' என்ற நட்சத்திர பெயராகியிருக்கிற உத்தர பல்குனியும் வெறும் உத்திரமாகவே நிற்கிறது. மாதப் பெயராக பல்குனியே பங்குனி என உருமாற்றம் கண்டுள்ளது.

ஸ்ரீ பெரியவா இப்படி அழகாக எப்படியெல்லாம் நட்சத்திரங்களின் பெயர் மருவி தமிழாகியுள்ளதென்பதை விவரித்தபோது இதை எழுதியுள்ள திரு. ரா. கணபதியின் கண்களுக்கு முன்னால் நிற்கும் மகான் ஒரு தமிழ்த் தெய்வமாகவே காட்சி அளித்திருக்கக்கூடும்!

❖ ❖ ❖

## 21. செந்தமிழ்த் தெய்வம்

**ப**ழகு தமிழிலேயே உரையாற்றும் ஸ்ரீ மஹா பெரியவாளிடம் இத்தனை தமிழ்ப் புலமையா என்று தர்மபுர ஆதீனத்தினர் வியப்புறும் வகையில் அத் தெய்வம் ஸ்ரீமுகம் எனும் முன்னுரையை அருளியுள்ளார்.

ஆதீனத்தினர் பல தொகுதிகளாக வெளியிட்ட உரையுடன் கூடிய திருமுறை நூலுக்கு அவர் அளித்த ஸ்ரீமுகம் இது:

*"திருமுறைகளில் ஓரடியாவது தன் நாவினால் நவிலாத தமிழன் தமிழுலகில் இரான். அவற்றின் பொருளை அறிய வேண்டும் எனும் அவா ஒவ்வொருவன் உள்ளத்திலும் எழுவது இயற்கை. பக்குவமடைந்த பெரியோர்களோ, திருமுறைகள் யாவற்றிற்கும் பொருள் ஏகமாய் பொது நடம் புரிகின்ற பெம்மானே எனத் தெளிந்து, எல்லா அவாக்களுமடங்கிய ஆனந்த நிலையில் நிற்பர். சொற்களுடையவும் வரிகளுடையவும் சிறப்புப் பொருள்களை அறிவதற்காக அபக்குவிகளின் ஆவலைத் தனிவிக்க இதுகாறும் ஒருங்கே நூல் முகமாய் உதவி கிட்டிலது."*

ஸ்ரீ பெரியவாளா இத்தனை செந்தமிழ் புலவர் மொழியில் ஸ்ரீ முகம் எனும் முன்னுரையை அருளியதை வியக்கும் திரு. ரா. கணபதி அவர்கள் அந்த மெய்யறிவாளர் பன்மொழி அறிஞர் என்றும் அத் தெய்வத்திற்கு Philology எனும் மொழியியலிலும் அபார புலமை என்றும் சான்று கூறுகிறார்.

(நன்றி : கருணைக் கடலில் சில அலைகள்)

செந்தமிழ்ப் புலமையோடு பழகு தமிழ் புலமையும் உண்டு என்பதை உப்புமாவிற்கு அப்பெயர் எப்படி வந்தது என்பதை விளக்குவதன் மூலம் காட்டிய வேடிக்கையும் உண்டு.



பக்தர்களும், தமிழ் அறிந்தோரும் தரிசித்து நிற்க ஸ்ரீ மஹாபெரியவா ஒரு விநோத கேள்வியை எழுப்புகிறார்.

"உப்புமாவிற்கு அந்தப் பேர் ஏன் வந்தது தெரியுமோ"

தரிசித்து நின்றவர்களில் ஒவ்வொருவரும் வெவ்வேறு காரணங்களை சொல்கின்றனர். அதிலெல்லாம் 'கன்வின்ஸிங்' காகக் காரணம் கிடைக்கவில்லை.

ஒரு மெல்லிய புன்னகையோடு ஸ்ரீ பெரியவா "அது Uppuma இல்லே ubbuma 'ப' காரத்தை pa ன்னு சொல்லாமே ba ன்னு சொல்லணும். மாவையோ ரவையையோ வென்னீர்லே கொட்டினவுடனேயே அது வாணலி பூரா உப்பிடறதோல்லியோ... சாதம் வடிக்கிறச்சேயும்தான் அரிசி உப்பறது. ஆனா அதுக்கு ரொம்ப நாழி ஆறது. நொய்யும் ரவையுமோ சட்டுனு பாத்ரம் பூரா உப்பிடறது. அதனாலேதான் உப்புகிற மாவுங்கற அர்த்தத்துலே அந்த பேர் ஏற்பட்டிருக்கு"

இப்படி உப்புமாவிற்கு அபூர்வ விளக்கம் கொடுத்த வித்தகர் 'இட்டிலி'க்கான பெயர் வர காரணத்தை சொல்கிறார்.

"இடுதல் என்பது ஒன்றை இட்ட இடத்தில் தொடாமல் அப்படியே வெச்சுட்டு இருந்துடறதுன்னு ஒரு அர்த்தம் உண்டு. புடம் போடற தங்கத்தை அப்படியே நெருப்பிலே ரொம்ப நேரம் வைச்சிருப்பா.. அந்த தங்கத்துக்கு இடு தங்கம்னே பேரு. 'மருந்து வைக்கறது'ன்னு வசிய மருந்தை ஒரே ஒரு தரம் கொடுத்துட்டு அப்படியே விட்டுடுவா... அதுக்கு 'இடுமருந்து' ன்னு பேரு... அதே ரீதியிலே மாவை ஸ்டீம்லே வெச்சி மூடிட்டு அப்புறம் பக்குவமாக்கட்டும்னு விட்டுடறோமோல்யோ அதனாலே அது இடுதல்தான். அதுவே இடல், இட்டல்ன்னும் சொல்லலாம். பேச்சுவாக்கிலே 'இட்டிலி' ஆயிடுச்சு"

வெறும் கைப்பிடி பொரியில் உயிர்வாழ்ந்த முற்றும் துறந்த மாமுனிவராம் ஸ்ரீ பெரியவா தன் அசாதாரண தமிழ் புலமையை சாதாரண சிற்றண்டியின் பெயர்க் காரணத்தை விளக்குவதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளது வேடிக்கை தான்.

# 22. செவிக்கு விருந்தளிக்கும் தமிழ் விளையாட்டு

**ஸ்ரீ** பெரியவா சமையல் சம்பந்தமான தமிழுக்கு எப்படியெல்லாம் ருசியாக விளக்கம் தந்துள்ளார் என திரு. ரா. கணபதி அவர்கள் விவரிக்கிறார். தூய தமிழாக இல்லாமல் நாம் அன்றாடம் பழகு தமிழில் உணவிற்கு பயன்படுத்தும் வார்த்தைகளுக்கு பெரியவாளின் விளக்கம்.

“சத்து உள்ளது எதுவோ அதுவே சாதம்!”

சத்தானவர்களை ‘ஸாது’ என்கிற மாதிரியே நம் சாப்பாட்டில் முக்யமான பண்டமாக இருந்து கொண்டு நிறைய சத்துத்தரும் சோற்றை ‘ஸாதம்’ என்கிறோம்.

இன்னொரு தினிசாகவும் அர்த்தம் கொடுக்கலாம். ப்ரஸன்னத்தால் உண்டாவது ப்ரஸாதம். நிவேதனத்தை சுவாமி ப்ரஸன்னமாக வந்து ஏற்றுக் கொள்வதால் நாம் நைவேத்யம் என்று அவருக்கு படைப்பதை ‘ப்ரஸாதம்’ என்பதாக அவர் நமக்கு திருப்புகிறார். மனுஷரான நாம் சாப்பிடும் சோற்றுக்கு தெய்விகப் பெருமை சேர்க்கிற அடைமொழியான ‘ப்ர’வை சேர்ப்பதில்லை. அதனால் ப்ரசாதத்திலிருந்து ‘ப்ர’ வை கழித்து வெறும் சாதம் என்ற பேர் ஏற்பட்டிருப்பதாகவும் வேடிக்கையாக சொல்லலாம்.

ரஸம் என்றால் சாறு. அதுவே, பாட்டு, பேச்சு எதுவுமே நல்ல ருசியோடு இருந்தால் ரசமாக இருக்கிறது என்கிறோம். வைணவர்களுக்கு தமிழபிமானம் அதிகம். அவர்கள் ‘சாத்தமுது’ என்று ரசத்தைச் சொல்வார்கள். அதற்கு ‘சாதத்துக்கு போட்டுக் கொள்ளும் அமுது’ என்று அர்த்தமில்லை ‘சாறான அமுது’ தான் சாற்றமுதுவாகி சாத்தமுது வாகியுள்ளது.



வைஷ்ணவர்கள் சாப்பாட்டு தினுசுகளுக்கெல்லாம் ‘அமுது’ன்னு சேர்த்து மதுரமாக்கி கரமது, திருக்கண்ணமுது என்றெல்லாம் சொல்வார்கள்.

பாயஸத்தைதான் அவர்கள் திருக்கண்ணமுது என்பார்கள். அதென்ன திருக்கண்? ருத்ராக்ஷம் என்றால் ருத்ரனின் கண். அது மாதிரி திருக்கண் என்றால் லக்ஷ்மியின் கண்ணா? ஒரு சாப்பாட்டு வஸ்துவிற்கு அப்படி பெயரிட வாய்பில்லையே...

திருக்கன்னலமுது என்பதுதான் திருக்கண்ணமுது ஆகியிருக்கு. கன்னல் என்றால் கரும்பு. சர்க்கரைப் பொங்கலுக்கு முக்கியமான சர்க்கரை, வெல்லம் எல்லாம் கரும்பிலிருந்து பிழிந்தெடுத்து பண்ணுவதுதானே... ஒன்றை பிழிந்தெடுத்த ருசியோடு இருக்கும்போது அதிலிருந்து கசடு, கசண்டு எல்லாம் போய் தெளிவாய் தெளிந்துதானே இருக்கும்? அதனால் ரசமான விஷயம் எதுவானாலும் அது கன - நயம் என்கிறதில் கனமாகக் கெட்டியாக இல்லாமல் நயமாக லேசாக நீர்க்க இருக்கும். நம் சாப்பாட்டில் எடுத்துக் கொண்டாலும் அதில் ஓட ஓட இரண்டு வகையறாக்கள். ஒன்றுதான் ரஸம். இன்னொன்று குழம்பு.

குழம்பிலே புளியைக் கொட்டி கரைத்து கெட்டியாக கொட்டி கறிகாய்த்தான் வேறு போட்டிருப்பதால் அதற்குள்ள என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ள முடியாமல் ‘குழம்பி’ கிடக்கிறது. குழம்பியிருப்பதாலேயே அது ‘குழம்பு’.

ரஸத்தில் அப்படி இல்லை. அந்த அளவிற்கு குழம்பியில்லை. நீர்க்க லேசாக இருக்கோல்லியோ” என்று பெரிவா விளக்குகிறார்.

“தான் என்ற அங்காரம் வந்தால் குழப்பம் ‘தான்’” இல்லாதிருந்தாலே தெளிவு. அதைத்தான் கறிகாய்த் ‘தான்’ போட்டுள்ள குழம்பும், தான் போடாத ரஸமும் குறிப்பிடுகின்றன என்று பேரறிஞர் கி.வா.ஜ சொல்வார். இதைக் கேட்ட பெரியவா இந்த விளக்கமும் ரசமாயிருப்பதாக ரசித்தாராம். ஆனால் அதுவும் கூட வேதாந்தத் தமிழ்மொழி

நுட்பப்படி சரியில்லை என அறிந்து அதை கி.வா.ஜ விற்கு சொல்லி அனுப்பினாராம். அதைக் கேட்ட தமிழ் பேரறிஞர் பெரியவாளின் மொழியறிவை வியந்து போற்றினாராம்.

தெய்வத்தின் தமிழ் ஆராய்ச்சி இன்னும் பல தின்பண்டங்களின் பெயர்க் காரணங்களிலும் படர்கிறது.

“ஆபூபம்”ன்னு சமஸ்கிரதத்துலே சொல்றதையே தமிழ்லே அப்பம்ங்கிறோம். அப்பத்துக்கு மூலபொருளாய் இருக்கிற மாவுக்கு ‘அபூப்யம்’ன்னு பேரு... இங்கே ஒரு வேடிக்கை. மாவிலிருந்துதான் அப்பம் வரது. ஆனா பேர் வெச்சிருக்கிறதை பார்த்த ‘அபூபம்’கிறதுலேர்ந்துதான் மாவுக்கு அபூப்யம் னு பேர் வர மாதிரி இருக்கு. ‘அபூப்யம்’ தான் தமிழிலே ஆப்பம்”

ஒரு முறை ஸ்ரீ பெரியவா சன்னதியில் சீர் பட்சணங்கள் பற்றி பேச்சு வந்ததாம். சன்னதியில் பேச்சுக்கு வராத ‘டாபிக்’ என்னதான் பாக்கியிருக்கு என்று அதை கேட்டு சுவைபட நமக்கு திரு. ரா. கணபதி படைத்துள்ளார்.

“லடனம் என்றால் விளையாடுவது. ‘லடகம்’ என்றால் விளையாட்டுக்கு உதவுகிற sports goods. ஆட்டங்களில் முக்யமாக பந்தாட்டத்தைத்தான் சொல்வது. அதனால் ‘பந்து’ என்பதற்கே ‘லடகம்’ என்ற விளையாட்டுப் பொருளுக்கான பெயர் பொருந்தும் ‘லட்டு’ பந்து மாதிரிதானே இருக்கு? அதனாலேதான் அதுவும் ‘லடக’ப் பேர் பெற்று ‘லட்டுகம்’ என்றாகி பேச்சு தமிழில் லட்டு என்றாகியிருக்கு. லட்டுக்கே ‘குஞ்சாலாடு’ என்றும் பேர்... அது என்ன ‘குஞ்சா’ என்றால் ‘gunja’ என்றால் குந்துமணி. அம்பாள் காமாக்ஷியையே ‘மூகபஞ்சசதி ஸ்தோத்திரம்’ பண்ணினவர் ‘மாதங்கி’ என்ற ரூபத்திலே அம்பாள் வேட ஜாதி அவதாரம் பண்ணின திருக்கோலத்தை வர்ணிக்கும்போது அம்பாளை ‘குஞ்ஜாபூஷா’ என்கிறார். குந்துமணியாலான சங்கிலி, வளையல் முதலான பூஷணங்களைப் போட்டுக் கொண்டிருப்பவள் என்று அர்த்தம்... குந்துமணி குந்துமணி யா சின்ன சின்ன பூந்தி பண்ணி உருண்டையா பிடிக்கிறதாலே அது gunjaladu - Kunjaladu இல்லே.”



ஆகா எப்படியெல்லாம் மொழிகளையும் ஆன்மிகத்தையும் லட்டாக பிடித்து இனிக்க இனிக்க இந்த முற்றும் துறந்த முனிவரால் தரமுடிகிறதென்று நம் செவி நிறைகிறதல்லவா.

அடுத்து பொரிவிளங்கா உருண்டையை நம் தமிழ் தெய்வம் எப்படி உருட்டுகிறார் பார்ப்போம்.

“பொருள் விளங்கா உருண்டை” என்பதுதான் பொரி விளங்கா உருண்டை என்று ஆகிவிட்டதுன்னு யாரோ எழுதியிருந்தா (சிரிக்கிறார்) அவர் அப்படி அர்த்தம் பண்ணினது எனக்கு பொருள் விளங்காம போச்சு!

சமையல் விஷயம் தெரிஞ்சவா வெல்லப்பாகுதான் மாவோட சேர்த்துப் பிசைந்ததால் அது கெட்டிப்பட்டிருக்கு ன்னு ஈஸியாவே பொருள் விளங்கி கொண்டு விடுவா. சமையல் விஷயம் தெரியாதவரும் கூட அதில் கொஞ்சம் ருசி பார்த்தாலும் போதும். வெல்லம், அரிசிமாவு, சுக்கு இத்யாதி போட்டு பண்ணினதுன்னு பொருள் விளங்கிக் கொண்டுவிடுவா!

அப்படி பார்த்தா ஜாங்கிரி, அல்வா இதையெல்லாம் சாப்பிடறவாளுக்கு அந்த பட்சணம் எந்தெந்த மூலப்பொருள்லே செஞ்சிருக்குன்னு பொருள் விளங்கிறது கஷ்டம்தான்.

அதனால ‘பொரிவிளங்கா உருண்டை’ ன்னு சொல்றதுதான் சரி! அந்த உருண்டை ‘விளங்காய் ஓடு’ மாதிரி கெட்டியா கனமாதானே இருக்கு! முன் நாளில் பொரி மாவைப் போட்டே அதை பண்ணியிருப்பா. பொரிமாவுக்கு அரிசி மாவை விட சத்துக்கு சத்தும் ஜீரணிக்கவும் சுலபம். ருசிக்கும் ருசி. அப்புறம் யார் பொரி பொரித்து இடித்து கஷ்டப் படறதுன்னு அரிசி மாவைப் போட்டு பண்ண ஆரம்பிச்சிருக்கலாம்.

திருப்பாவை இருபத்தேழாம் பாட்டின் சுவையை நம் தமிழ்த்தெய்வம் நமக்கு எப்படி சுவைபட தருகிறார் படியுங்கள்.

“ஆண்டாள் திருப்பாவையிலே நோம்பு நோற்ற எல்லா பெண்களும் கூடி கூட்டாஞ்சோறு சாப்பிடுவதை அழகாக

வர்ணித்திருக்கிறாள். அதை 'கூடாரவல்லி' ன்னு பண்டிகையா கொண்டாடறோம்.

நெய் சொட்ட சொட்டன்னு தான் நாம் சொல்வோம் ஆனா ஆண்டாளோ இன்னும் ஒரு படி மேலே போய் **'பாற் சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவார'** என்று சொல்கிறாள். பொங்கலில் விட்ட நெய் மேலே மிதக்க அது பரிமாறும் போது கைகளில் வழியறதோண்ணோ... அதை தான் சொல்றா

ஆனா இங்கே 'பாற்சோறு மூட நெய் பெய்து' ன்னு என்கிறதிலே பால், அரிசி, நெய் இருக்கிறதே தவிர கன்னலை அதான் 'சர்க்கரையை' பத்திச் சொல்லலயே ன்னு ஒருத்தர் கேட்டார் (சிரிப்பு) சுகர்பேஷன்ட்ன்னு சொல்றாளே அவாளுக்கு பண்ணின மாதிரி சப்பு சவுக்கு இருக்குமான்னு அவருக்கு சந்தேகம்.

"ஆனா அது அப்படியல்ல. கன்னல்தான் முக்கியமான அங்கம்னு 'it goes without saying'ன்னு சொல்வாளே அப்படி அதை சொல்லாம விட்டிருக்கா."

சமஸ்கிருதத்தில் பால் சர்க்கரைப் பொங்கலைத்தான் 'பாயஸம்' என்பது. 'பயஸ்' என்றால் பால். அந்த பாலிலே அன்னத்தை வேகவைத்து பால் சர்க்கரை சேர்த்து பண்ணுவதுதான் பாயஸம்.

அது பிற்காலத்தில் பருப்பு பாயஸம், ரவா பாயஸம் சேமியாப் பாயஸம்ன்னு வந்துடுத்து. அதில் சிலதில் பாலே சேர்க்கிறதில்லை. ஆனாலும் 'பாயஸம்' தான். பாயஸம் என்பதிலும் பாலை மட்டும்தான் சொல்லியிருக்கு. அரிசி, சர்க்கரை இரண்டும் 'goes without saying.'"

தன் பிட்சையாக ஒரே ஒருபிடி நெல்பொரியை உண்டு உயிர்வாழ்ந்த தெய்வம் இப்படி நாமெல்லாம் வளைத்து கட்டுகிற தின்பண்டங்களின் பெயர்க் காரணத்தை ஒரு தமிழ் ஆராய்ச்சியாகவே அலசியிருப்பது வினோதம்தான்!

❖ ❖ ❖



## 23. கஞ்சி குடியாளே

"**கா**மாட்சியை கஞ்சி குடிக்க மாட்டா ன்னு ஒரு புலவர் சிலேடையாக பாடியிருக்கார்..." என்று ஸ்ரீ பெரியவா ஒரு நாள் பேச்சை ஆரம்பித்தார்.

"கஞ்சி குடியாளே! கம்பஞ்சோறுண்ணாளே"ன்னு கஞ்சி குடிக்க மாட்டா; கம்பைப் போட்டு பண்ற களி - கம்பஞ்சோறு அதையும் சாப்பிட மாட்டா ன்னு எல்லாம் பாடிண்டு போயிருக்கார். ஆனா அதிலே இன்னொரு அர்த்தம்.. நிஜ அர்த்தம் வேற. காஞ்சிபுரமாகிற கஞ்சியில் குடியிருப்பவள் தானே காமாட்சி 'குடியாள்'ன்னா குடியிருப்பவள் அதனாலே 'கஞ்சிகுடியாள்!

எல்லாக் கோயிலேயும் ஈஸ்வரருக்கு நைவேத்யம் பண்ணிட்டுத் தான் அப்புறம் அம்பாளுக்கு பண்ணுவா... அதாவது சுவாமியின் ஆகாரத்தை, அன்னத்தை சோற்றை அம்பாள் சாப்பிடறது. இங்கே எப்படி? சுவாமி ஏகாம்பரேச்வரர் - ஏகம்பன் னும் கம்பன் னு மட்டுமே சொல்லபடறவர்... அவர் பாட்டுக்கு எங்கேயோ இருக்கார். காமாட்சியோ ராணியாட்டம் தனியா ஒரு கோயில் கட்டிண்டு உட்கார்ந்திருக்கா... அதுலே தனக்குத்தானே நைவேத்யம் பண்ணி ஸமர்ப்பிக்கும் படியா தர்பார் பண்ணின்டு இருக்கா... 'கம்பன்' அதாவது ஏகம்பனின் சோற்றை இவள் சாப்பிடறதில்லே... அதனாலே தான் 'கம்பஞ் சோறுண்ணாளே' என்கிறார்.

இந்த சந்யாசிக்குள் ஒரு சங்ககால புலவரைப் பார்த்த மகிழ்ச்சி இதைக்கேட்ட திரு. ரா. கணபதி அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்!

## 24. தமிழ் வாசனை

**வா**சனை, நாற்றம் பற்றி முனிவரின் அலசல் இது.

“வாசனை, நாத்தம் (நாற்றம்) ன்னு ரெண்டு வார்த்தை சொல்றோம். வாசனை சமஸ்க்ருதம்... நாத்தம் தமிழ். ரெண்டுக்கும் சரியான அர்த்தம் என்னன்னா மூக்குக்கு அகப்படற ஒரு உணர்ச்சிதான். நல்லது கெட்டதுன்னு வித்யாசமில்லாம பொதுப்படையா ‘ஸ்மெல்’ங்கிறதுதான்... ஆனாலும் நடைமுறையில் எப்படி அர்த்தம் பண்ணிக்கிறோம்னா ‘வாசனை’ன்னா நல்லா மணக்கிறதும்னுன்னும், நாத்தம்ன்னா (மூக்கை பிடித்து காட்டுகிறார்) இப்படி மாதிரி அர்த்தம் பண்ணிக்கறோம்.

இலக்கிய ரீதியிலே வேதாந்த பாஷையிலேயும் நேர் மாறா இருக்கு. இலக்கியத்திலே நாத்தம்னா சுகந்தம் ‘பொன்மலர் நாற்றமுடைத்து’ ன்னு இருக்கே. அதே மாதிரி வேதாந்த சாஸ்திரத்தில் வாஸனைன்னா. துர்வாஸனை தான்.

இங்கே வாடை வீசறதுன்னு சொன்னா அதை துர் வாடை ன்னுதான் அர்த்தம் பண்ணிக்கறோம். அதுக்கு காரணம் உண்டு... நாத்தம்னா ஏன் துர்நாத்தம்னும், வாசனைன்னா ஏன் நலல வாசனைன்னு எடுத்துக்றோம்னு தெரியலே...

இதுக்குக் காரணம் பார்க்கப் போனா எங்கே சமஸ்கிருதம் தமிழ்ன்னு சண்டை வந்துடுமோன்னு பயமாகூட இருக்கு.



வாடை ன்னா ஏன் துர்வாடை ன்னு நாம் புரிஞ்சிக்கிறோம்னு காரணம் சொல்றேன். வாடைங்கறது ‘வட’, வடதிசை என்கிற சம்பந்தப்பட்டது. வடக்கே இருந்து வர காத்து வாடை. வடதிசை காத்து எப்ப வரும் பெரும்பாலும் தமிழ் தேசத்தோட மழைக்காலமாயிருக்கிற ஐப்பசி, கார்த்திகை மாதிரியான மாசங்களில்தான் அப்படி வடக்கு காத்து வீசும்... அப்போ மழையிலே குப்பை, கூளங்கள் எங்கே பார்த்தாலும் அழுகி போயிருக்குமானதுனால அந்த காத்துலே துர்வாசனை கலந்து வரும். அதனாலேதான் வாடைன்னாலே கெட்ட வாஸனைன்னு ஆயிடுச்சு.

தென்றல்ங்கிறது தென்னுன்னுதானே ஆரம்பிக்கிறது? தென்றல்னா தென் திசையிலிருந்து வர காத்து. அது கோடை காலத்திலேதான் வரும்... அப்போ பூமிமேலே குப்பை எல்லாம் மொரமொரன்னு வத்தி அழுகலே இருக்காது. அதனாலே தென்கோடி மலய பர்வதத்திலிருந்து வீசற காத்து சந்தன மரங்களோட வாசனையையும் ஏத்திண்டு வரதுன்னு கவிகள் அலங்காரமா சொல்லுவா.

துர்வாடை வீசினா அதை போக்க என்ன செய்யறோம் அந்த நாத்தத்துக்கு ஆப்போஸிட்டா ஊதுவத்தியை ஏத்தி வைச்சுடறோம். அது நாத்தத்துக்கு வத்தி வைச்சுடறது.

‘வத்தி வச்சுடறது’ங்கிறது ஊதுவத்தி வெச்சு ஏற்பட்டதில்லை.... ‘வர்த்தனம்’ன்னா உருள்றது. உருட்டி பண்ற எதுவும் வர்த்தி. அதுதான் ‘வத்தி’ ன்னு வந்துடுத்து.

ஒரு குச்சியை சுத்தி வாஸனை கலவையை உருட்டி பண்றது ஊதுவத்தி! வத்தி வைக்கறதுன்னா என்ன? வர்த்திக்கே இன்னொரு அர்த்தம் ‘திரி’! பட்டாசு திரியிலே நெருப்பு பொரி வெச்சுட்டா அது டமால் ஓ வெடிக்கிற தோல்யோ அதைத்தான் ‘வத்தி வைக்கிறான்’ன்னு எச்சரிக்கையா சொல்றோம்.

இப்படி சகஜமான சாதாரண விஷயங்களுக்கு தமிழில் விளக்கம் கொடுத்துக் கொண்டு வந்த தெய்வம் அதற்கு

முடிவுரையாக ஒரு வேதாந்தக் கருத்தையும் கொடுத்ததுதான் சிறப்பு.

‘என்ன பண்ணி எப்படி போக்கடிக்கறதுன்னு துர்வாடை’யோட சண்டை போடாம ஒரு ஊதுவத்தியை ஏத்தி வைச்சுட்டா தன்னாலே அந்த வாடை போயிடும். அதுபோல வேண்டாத விஷய வாசனை மண்டுகிற மனசுலே அதை எல்லாம் விரட்ட சத்விஷயமான நாம ஜபம், பஜனை, உபந்யாஸம் இதுவே ஒண்ணுலே மனசை செலுத்திட்டோம்னா அதுவே ஊதுவத்தி சுகந்தமாக மற்ற வேண்டாத வாசனையை விரட்டிடும்”

என்று அற்புதமான அறிவுரையுடன் அவருடைய தமிழ் அறிவை நாம வியப்பதற்குள் நம் கவனத்தை திருப்புகிறார் தமிழ்த் தெய்வம்.

❖ ❖ ❖



# முடிவுரை

இப்புத்தகத்துக்கு தமிழ்த் தெய்வம் ஸ்ரீ மஹாபெரியவா என்று தலைப்பிட்டு பல பக்கங்கள் எழுதி முடிவுரை மட்டும் எழுதவிருக்கும் சமயத்தில் இன்னும் ஏதாவது தமிழ் சம்பந்தப்பட்ட ஸ்ரீ பெரியவா சம்பவம் கிடைக்கிறதா என்று இதுவரை பார்க்காத ஒரு நூலை எடுத்தேன்.

அதில் பல தலைப்பின் கீழ் கட்டுரைகள் எழுதப்பட்டிருந்தது. அதில் ஸ்ரீ மஹாபெரியவா மகிமை சம்பவங்கள் நிறைந்திருந்தன. அதில் ஒன்று ‘சுவாமிகளின் தமிழ்ப் பற்று.’

அதில் ஸ்ரீ மஹா பெரியவாளுக்கு தமிழ் மீது மிகுந்த பற்று உண்டு என்றும், தான் விஜயம் செய்யும் கோயில்களில் தேவாரம், திருவாசகம், திவ்ய பிரபந்தங்களை ஒலிக்கச் செய்தார் என ஆரம்பித்து ஸ்ரீ பெரியவா தமிழில் உள்ள சங்க நூல்கள், பழைய காப்பியங்கள் இவற்றைப் பற்றி நேரம் கிடைக்கும் போதெல்லாம் தீவிர ஆய்வில் ஈடுபடுவார் என்று கண்டிருந்தது.

இவையாவிற்கும் சான்றாக இந்த புத்தகத்தின் முந்தைய பகுதியில் எழுதிவிட்டிருந்த எனக்கு கட்டுரையின் அடுத்த பாராவில் தமிழ்த் தாத்தா திரு. உ.வே. சுவாமிநாத ஐயர் ஸ்ரீ பெரியவாளின் தமிழ்ப் பற்றை புகழ்ந்து எழுதியிருப்பதை ஆசிரியர் குறிப்பிட்டிருந்ததை படிக்க நேர்ந்தது.

அதைப் படித்ததும் ஒரு பரவசம்.

‘தமிழ் தாத்தா மகாமகோபாத்யாய உ.வே. சுவாமிநாத ஐயர் சுவாமிகளை தரிசிக்க மடத்துக்கு வருவார். சுவாமிகளின்

தணியாத இலக்கிய ஆர்வத்தைக் கண்டு தன் உடல் தளர்ச்சியைப் பொருட்படுத்தாது நெடு நேரம் பேசிக் கொண்டிருப்பார். அந்த சந்திப்பில் சுவாமிகள் சில பாடல்களுக்கு புதிய அர்த்தங்களைக் கூறுவார். தமிழ் தாத்தா அதைக் கேட்டு வியந்து போயிருந்தார். 'தமிழ்த் தெய்வம்' என்று சுவாமிகளை அவர் போற்றி இருக்கிறார்.

இதைப் படித்ததும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளெனும் அத் தெய்வம் என் மனதில் ஸ்புரிக்க வைத்த 'தமிழ்த் தெய்வம் ஸ்ரீ மஹா பெரியவா' என்பதே அன்று தமிழ்த் தாத்தா திரு. உ.வே.சா. அவர்களின் மனதிலும் ஸ்ரீ மஹா பெரியவாளுக்கு சூட்டப்பட்ட புகழாரம் என்பதை அறிந்தபோது அத் தெய்வத்தின் பேரருள் வெளிப்பட்டது.

ஆக, இந்நூலுக்காக தன் அனுக்ரஹத்தை தமிழ்த் தெய்வம் ஈந்தருளியதாகவே இதை எடுத்துக் கொண்டேன்.

தமிழ்த்தாத்தா தமிழுக்காக ஆற்றிய பெரும் தொண்டைப் பாராட்டி 'தாட்சிணாத்ய கலாநிதி' என்ற உயர் பட்டத்தை வழங்கி, மடத்தின் உயர்ந்த கவுரவமான இரட்டை காஷ்மீர் கம்பளங்களை தமிழ்த் தாத்தாவிற்குப் போர்த்தி கௌரவித்தாராம்.

அதேபோல் ஒரு உயர்ந்த கௌரவத்தை பிரம்மஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மாரின் தந்தையும் கவிகுஞ்சரம் என்று ஸ்ரீ மஹாபெரியவாளின் திருவாக்கினால் அருளப்பட்டவரான கவிச்சக்கரவர்த்தி இராம வைத்தியநாத சர்மா எனும் அருட்கவியும் பெற்றுள்ளார்.

இவருடைய கவித்திறமையை போற்றி ஆனந்த நடராஜ மூர்த்தியாம் நம் பெரியவா இவருக்கு கவிகுஞ்சரம் என்று பட்டம் வழங்கியதோடு இரு சால்வைகள் போர்த்தி தமிழுக்கு மரியாதை செய்துள்ளார்.

புலவர் சாக்ஷாத் சிவபிரானாக காட்சி தந்த ஸ்ரீ பெரியவாளை.

**திங்களஞ்சடைச் சிவபிரான் உருத்**
**தெரியவே விளங்கு அரியதோர் மகான்**
**மங்களம் பெற சங்கரன் பெயர்**



**மாநிலத்திலே தான் நிலைக்கவா**
**எங்களின் குரு தெய்வமாகி நின்று**
**எம்மை ஆளுறும் செம்மலா இவன்**
**டங்கு சந்திர சேகரேந்திர**
**சரஸ்வதி பதம் சரண் அடைந்தனன்**

என்று தொடங்கி தனக்கு சோடி சால்வை அளித்தருளிய தெய்வத்தை

**இப்புவி மீதில் விளங்குறு தெய்வமாகி அமர்குருவே**
**அம் கொடையில் புகழ் தங்கிய செல்வம் அடைந்துள**
**விண் தருவே**
**எம் பவம் முற்றும் அகற்றி அருள்புரி எங்கள் தவத்திருவே**
**ஈசன் அடிக் கமலப்பதமே அகம் எண்ணுறு நற்திருவே**
**தம்பதம் உற்று வணங்கி அருந்தமிழ் தந்துறு சந்தமதால்**
**தரைபுகழ் பெற்றுறு கவிதை இயற்றிய சந்தம் உறும் சருமா**
**வம்பலர் மாலை மணந்து தோளினை வந்து பிறங்கிடவே**
**வாழ்வுறு சோடிச் சால்வை அளித்த மகான் அடி வந்தனமே**

இப்பேற்பட்ட பாக்யடைந்த கவிச்சக்கரவர்த்தியின் புண்ணிய புதல்வராய் தோன்றி ஸ்ரீ மஹாபெரியவாளின் பக்தி என்றும் நிலைபெறுமாறு செய்யவே அவதரித்த 64ம் நாயன்மாராம் பிரம்ம ஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மாரை தன்னுள் ஈர்த்துக் கொண்ட அந்த தருணத்திலும் ஸ்ரீ மஹாபெரியவா தான் தமிழ்த் தெய்வமென்பதை காட்டியருளியுள்ளார்.

வேறு வடமொழி மந்திரவரிகளை தெய்வம் திருவாக்காக கையாளாமல் 'தந்தது உன்தன்னை கொண்டது என் தன்னை' என்ற தமிழ் தேவார வரிகளிலேயே பக்தரை ஆட்கொண்டுள்ளார்.

அதே போல் இந்த தமிழ்த்தெய்வம் 'இவர் என்மேல் அந்தாதி பாடியிருக்காறா கேளு' என்று பிரதோஷம் மாமாவின் மைத்துனரான தமிழ்க் கவிஞர் திரு. சுப்ரமணிய கிருட்டிணமூர்த்தியை வலிய தானே கேட்டுள்ள விந்தை நிகழ்ந்துள்ளது.

இவர் இயற்றிய ‘சங்கரசிவா’ என்று முடியும் 126 தமிழ்க்கவிதை வரிகளை ஒவ்வொரு வரிக்கும் ஒரு சிட்டிகை பூராசர்க்கரையை தன் திருவாயால் சுவைத்து இத் தெய்வம் அங்கீகரித்துள்ள அபூர்வம் நிகழ்ந்த பின் இப்படி தன் மேல் அந்தாதி எழுதும்படி தெய்வமே கேட்டுள்ள விநோதமும் நிகழ்ந்தது.

தான் சாக்ஷாத் தெய்வமே என்பது வெளிப்படுத்திய அதே சமயம் தமிழ்ப்புலவரை ஊக்குவிக்கும் வகையில் ‘அந்தாதி எழுதியிருக்காரா’ என்று வலிய கேட்டுள்ளார். அதன்பின் புலவர் எழுதிய அந்தாதியை சமர்ப்பித்தபோது சுமார் $6^1/_2$ மணிநேரம் அந்த 108 அந்தாதி பாடல்களை ஆதிமுதல் அந்தமாக மூன்றுமுறை படித்து தான் தமிழுக்கு தரும் முக்கியத்வத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

*“எப்படியாவது தமிழ்ப் பெரியோர்களை எல்லாம் ஸ்ரீமடத்தில் சம்பந்தம் ஏற்படுத்தி பார்ப்பதில் எனக்கு திருப்தி. நம் மடம் என்றால் சமஸ்கிருதத்துக்குதான் முக்கியத்வம் என நினைக்கிறார்கள்.*

*நம் மடத்துக்கு தமிழ் சம்பந்தம் நிறைய உண்டு அந்தந்த கால ஆச்சார்யர்களிடம் தமிழ்ப்புலவர்கள் தங்கள் புலமையைக் காட்டி பிரசாதம் சம்பாவனை பெற்று போயிருக்கிறார்கள்.*

*தமிழ், சம்ஸ்கிருதம் இரண்டுமே பேதப்பட்டு நிற்க ஆரம்பித்த 20ம் நூற்றாண்டில் இதை எப்படியாவது ஆதியில் இருந்த மாதிரி ஐக்கியப்படுத்தி விட வேண்டும்; எல்லோரையும் சந்திர மௌலீஸ்வரர் சன்னதியில் அவருடைய குழந்தைகளாக ஒன்று சேர்த்து விடவேண்டும் என்பதுதான் என் நினைப்பாய் எப்போதும் இருக்கிறது.”*

தென்னாடுடைய சிவனாம் இத்தெய்வமே இப்படி ஆதங்கப்பட்டு அறிவிக்கும் நிலைமையை நம் மொழிபேத உணர்வுகள் உண்டாக்கியுள்ளதை நினைத்து வருத்தப்படும் பக்தர்களுக்கு இந்நூல் சற்றே இதமளிக்கக்கூடும் என்ற நம்பிக்கையுடனும்,

அதே சமயம் இப்படி ஆதங்கப்படும் உலகமகா தெய்வம் இந்த எளியேனுக்காக ‘தமிழ்த்தெய்வம்’ என்ற எல்லைக்குள் வந்து அமர்ந்தருளியதற்கு அத்தெய்வத்தின் பாத கமலங்களுக்கு சமர்ப்பிக்கும் நன்றி கலந்த வணக்கங்களுடனும்,

– அகிலா கார்த்திகேயன் –